ISBN : 978-81-685845-6-3

செந்தமிழறிஞர்கள்:108



பம்மல் சம்பந்தனார்

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்



NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

செந்தமிழ்சிற்பிகள்

பம்மல் சம்பந்தனார் (1873 - 1964)



பம்மல் சம்பந்தனார் (1873 - 1964)

பம்மல் சம்பந்த முதலியார் தமிழ் நாடகத் தந்தை என்ற பெயருடன் வழங்கப்பட்டவர். தமிழ் நாடகங்களை முதன்முதலில் உரைநடையில் எழுதியவர். வழக்கறிஞர், நீதியரசர், நாடகாசிரியர், மேடை நாடக நடிகர், எழுத்தாளர், நாடக இயக்குனர் என்ற பல பரிமாணங்களைக் கொண்டவர்.முதன்முதலில் புஷ்பவல்லி என்ற சமூக நாடகத்தை 1883ல் எழுதி நடித்தார்.1891ல் சென்னையில் சுகுணவிலாச சபா என்ற அமெச்சூர் நாடகசபையைத் தோற்றுவித்து நாடகங்களை எழுதி தாமே நடித்து பிற அறிஞர்களையும் நடிக்க வைத்த சான்றோர் இவர்.

வாழ்க்கைக் குறிப்பு

சென்னையில் பம்மல் விஜயரங்க முதலியார் - மாணிக்கவேலு அம்மாளுக்கும் [2] பிப்ரவரி 1ம் நாள் 1873 அன்று பிறந்தார். இவர் தந்தை வேதரங்கம் முதலியார் முதலில் தமிழ் ஆசிரியராகவும், பின்னர் பள்ளிக் கல்வித் துறையில்

ஆய்வாளராகவும் இருந்தவர். அவர் தானே தமிழ் நூல்களை வெளியிட்டு வந்தார் . இதன் காரணமாக அவர்கள் வீட்டில் ஆங்கிலத்திலும் தமிழிலும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் இருந்தன. படிக்கத் தெரிந்த நாள் முதல் சம்பந்தம் இப்புத்தகங்களையெல்லாம் ஒன்றொன்றாக ஆர்வமுடன் படித்து வந்தார். கோவிந்தப்ப நாயக்கர் உயர்நிலைப் பள்ளி, பச்சையப்பன் உயர் நிலைப் பள்ளி, மாநிலக் கல்லூரி ஆகிய கல்வி நிலையங்களில் கல்வி பயின்றார். சட்டக்கல்வி பயின்று வழக்கறிஞரான இவர் 1924 முதல் 1928 வரை நீதிமன்றத் தலைவராகவும் பணி செய்தார்

நாடக எழுத்துப்பணி

சிறு வயதிலேயே ஆங்கில, தமிழ் நாடகங்களைப் பார்த்தவர், தமிழ் நாடகப் போக்கில் இழிந்த நிலையைக் கண்டு அதில் வெறுப்புற்றிருந்தார்.

1891 இல் பெல்லாரியிலிருந்து வந்த கிருஷ்ணமாச்சார்லு என்ற ஆந்திர நடிகர் நடித்த நாடகங்கள் இவருக்கு தமிழ் நாடகங்கள் மேல் பற்றினை உண்டு பண்ணின. அவரது நாடகக் குழுவில் வழக்கறிஞர்களும், மருத்துவர்களும், பட்டப்படிப்பு முடித்தவர்களும் சேர்ந்திருப்பதைக் கண்ட சம்பந்த முதலியார் தாமும் அது போல ஒரு நாடகக் குழு அமைக்கத் திட்டமிட்டார். சீரழிந்த நி லையில் அவதிப்படும் தமிழ் நாடகத்தை சீர்படுத்திட வேண்டும் என்ற இவரது ஆவலும் இவரை நாடக உலகிற்குள் புகுத்தியது. நண்பர்கள் சிலருடன் சென்னை ஜார்ஜ் டவுனில், 1891 ஜூலை 1 ஆம் நாள், "சுகுண விலாச சபை" என்ற நாடகக் குழுவை உருவாக்கினார்.

நாடகம் என்றால் தெருக்கூத்து என்றும், சிற்றூர் மக்கள் மட்டுமே காண்பவர்கள் என்ற நிலையை மாற்றி, நகரங்களிலே நல்ல மேடையமைத்து, பல வகை நாடகங்களை நடத்திக் காட்டினார். உயர்குடியில் பிறந்தவர்களையும், கற்றவர்களையும், அறிஞர்களையும், சம்பந்தம் தம்முடைய நாடகங்களில் நடிக்கச் செய்தார். இவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் சர். சி.பி.ராமஸ்வாமி அய்யர், எஸ்.சத்தியமூர்த்தி, எம்.கந்தசாமி முதலியார் (எம். கே. ராதாவின் தந்தை) , சர். ஆர்.கே. ஷண்முகம் செட்டியார், வி.வி.ஸ்ரீனிவாச அய்யங்கார், வி.சி.கோபாலரத்தினம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

நாடகக் கலைக்குத் தம் 81வது வயது வரை பெரும்பணி ஆற்றினார். கண்பார்வை மங்கிய நிலையிலும் தாம் சொல்லியே பிறரை எழுத வைத்தார்.

விருதுகளும் சிறப்புகளும்

22வது வயதில் அவருடைய முதல் நாடகம் 'லீலாவதி-
சுலோசனா' என்ற பெயருடன் அரங்கேறியது.
மொத்தம் 80 நாடகங்கள் எழுதினார்.
1959 இல் சங்கீத நாடக அகாதமி விருது[3]
1916 இல் நாடகப் பேராசிரியர் என்ற விருது பெற்றார்.
1959 இல் பத்மபூஷண் என்ற பட்டத்தையும் பெற்றார்.[4]
தன் நாடகங்களில் சிலவற்றில் செய்யுள், கீர்த்தனை முதலியவற்றையும்
அறிமுகப்படுத்தினார்.
தமிழ் நாடகம் மக்களின் பார்வையில் உயர்ந்த மதிப்புக்குரியதாகத் திகழ்வதற்கு
முதற்காரணமானார்.

தமிழில் ஷேக்ஸ்பியர் நாடகங்கள்

ஷேக்ஸ்பியரின் பின்வரும் ஆங்கில நாடங்கங்களை அவைகளின் சுவையோ
நயமோ குறையாமல் தமிழ் நாடகங்களாக மொழிபெயர்த்தார்.
Hamlet-அமலாதித்யன்
As You like it-நீ விரும்பியபடியே
Macbeth-மகபதி
Cymbeline- சிம்மளநாதன்
Merchant of Venice- வணிபுர வானிகன்

திரைப்படங்களாக்கப்பட்ட நாடகங்கள்

பம்மல் சம்பந்த முதலியாரின் பல நாடகங்கள் திரைப்படங்களாக்கப்பட்டுள்ளன
அவற்றில் சில
காலவா ரிஷி (1932)
சதி சுலோச்சனா (1934, கதை, வசனம், இயக்கம், நடிப்பு)
மனோகரா (1936, கதை, வசனம், இயக்கம், நடிப்பு)
ரத்னாவளி (1935)
யயாதி (1938)
ராமலிங்க சுவாமிகள் (1939)
சந்திரஹரி (1941)
ஊர்வசி சாகசம் (1940)
தாசிப் பெண் (1943)
சபாபதி (1941)
வேதாள உலகம் (1948)

நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்

பம்மல் சம்பந்த முதலியார் இயற்றி, தமிழ் நாட்டரசு
நாட்டுடைமையாக்கிய நூல்களின் பட்டியல்.

தமிழ்

இந்தியனும்-ஹிட்லரும்

இல்லறமும் துறவறமும்

என் சுயசரிதை

என் தந்தை தாயர்

ஒன்பது குட்டி நாடகங்கள்

ஓர் விருந்து அல்லது சபாபதி நான்காம் பாகம்

கலையோ-காதலோ? அல்லது நட்சத்திரங்களின் காதல்

கள்வர் தலைவன்

காதலர் கண்கள்

காலக் குறிப்புகள்

குறமகள், வைகுண்ட முதலியார் (இரு நாடகங்கள், 1934)

சபாபதி

சபாபதி முதலியாரும்-பேசும் படமும்

நான் குற்றவாளி

சாதாரண உணவுப் பொருள்களின் குணங்கள்

தமிழ் அன்னை பிறந்து வளர்ந்த கதை (முதல் பாகம்)

தமிழ் அன்னை பிறந்து வளர்ந்த கதை (இரண்டாம் பாகம்)

தீபாவளி வரிசை

தீயின் சிறு திவலை

நாடகத் தமிழ்

நான் கண்ட நாடகக் கலைஞர்கள்

நீண்ட ஆயுளும் தேக ஆரோக்யமும்

பலவகை பூங்கொத்து

மனை ஆட்சி

மனோகரா

மூன்று நகைச்சுவை நாடகங்கள்

யயாதி

வாணீபுர வணிகன்

விடுதிப் புஷ்பங்கள்

ஆங்கிலம்

Amaladitya

As you like it

an Adaptation of Shakespear's as We Sow-so We Reap

Blessed in a Wife

Brahmin Versus Non-brahmin

Bricks Between and at Any Cost

Chandrahari

Dikshithar Stories

Harischandra

Humorous Essays

Lord Buddha

Mixture

Over Forty Years Before the Footlights-1

Over Forty Years Before the Footlights-2

Sahadeva's Stratagem

Sarangadara

Sati Sakti a Farce in Tamil,sati Sulochana

Siruthondar

Siva Shrines in India & Beyond Part – Ii

Siva Shrines in India & Beyond Part – Iii

Siva Shrines in India & Beyond Part Iv,

siva Shrines in India & Beyond Part-v

Siva Temple Architecture Etc,

Subramanya Shrines in Tamil

The Fair Ghost

The Good Fairy

The Good Sister

The Gypsy Girl and Vaikunta Vaithiyar

The Idle Wife

The Knavery of Kalappa

The Surgeon General's Prescription and Vichu's Wife

The Wedding of Valli

(😊)(😊) %%%%%% (😊)(😊)



https://www.tamilvu.org/courses/degree/p102/p1023/html/p1023611.htm

பம்மல் சம்பந்த முதலியார்

பம்மல் சம்பந்த முதலியார் 1.2.1873ஆம் ஆண்டு பிறந்தார். இவரது பெற்றோர் பம்மல் விஜயரங்க முதலியார் - மாணிக்க வேலு அம்மாள். பம்மல் என்பது இவரது ஊர்ப் பெயர் ஆகும். 92 ஆண்டுக் காலம் நிறை வாழ்வு வாழ்ந்த சம்பந்த முதலியார் 24.9.1964ஆம் ஆண்டு மறைந்தார்.

இவர் ஆற்றிய பணிகளுக்காக 1916ஆம் ஆண்டு **இராவ்பகதூர்** பட்டமும் 1959ஆம் ஆண்டு **பத்மபூஷண்** பட்டமும் வழங்கப்பட்டன. 1944ஆம் ஆண்டில் நடைபெற்ற கலைவிழாவில் இவருக்கு **நாடகப் பேராசிரியர்** பட்டம் வழங்கப்பட்டது. நாடக உலகத்திற்கு இவர் ஆற்றியுள்ள பணிகளை எண்ணித் தமிழ் நாடக உலகம் இவரைத் **தமிழ் நாடகத் தந்தை** என்று குறிப்பிடுகிறது. அதே போல் சங்கரதாஸ் சுவாமிகளை **தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்** என்று குறிப்பிடுகிறது.

பணிகள்

பம்மல் சம்பந்த முதலியாரின் வாழ்நாள் பணிகளை இருபிரிவாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு

1) சமுதாயப் பணிகள்
2) கலை இலக்கியப் பணிகள்

சமுதாயப் பணிகள்

சம்பந்த முதலியார் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும், சட்டக் கல்லூரியிலும் முறையே பட்டப் படிப்பையும் சட்டப் படிப்பையும் முடித்தார். தகுதி மிக்க கல்வி இவருக்கு நிரம்ப இருந்ததால் அக்கல்வித் தகுதிக்குரிய பணிகளும் இவரைத் தேடி வந்தன.

- இவர் வழக்கறிஞராக இருந்தார்; சிலகாலம் நீதி அரசராகவும் இருந்தார்.
- அறநிலையத் துறையில் கோவில் அறங்காவலராக இருந்தார்.
- சென்னைப் பல்கலைக் கழகத்திலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் தமிழ் வளர்ச்சிப் பேரவை உறுப்பினராக இருந்தார்.
- பள்ளிப் புத்தகச் சங்க உறுப்பினராக இருந்தார்.
- மது விலக்குப் பேரவையில் பிரச்சாரக் குழுத்தலைவராக இருந்தார்.
- தென்னிந்திய விளையாட்டுக் குழுத் தலைவராக இருந்தார்.
- அன்னதான சமாசத்தின் செயல்குழு உறுப்பினராக இருந்தார்.

இவையெல்லாம் சம்பந்த முதலியாரின் சமூகப் பணிகளாகும்.

கலை இலக்கியப் பணிகள்

சம்பந்த முதலியாரின் கலை இலக்கியப் பணிகளில் குறிப்பிடத்தக்கவை.

1) நாடகக் கலைப்பணி 2) திரைப்படக் கலைப்பணி

இவையன்றி, இவர் தமிழ் மொழி வரலாற்றுப் பணி, சமய இலக்கிய வரலாற்றுப் பணி, இயற்கை மருத்துவ இலக்கியப் பணிகளிலும் ஈடுபட்டார். இங்கே அவரது நாடகக் கலைப்பணியை மட்டும் அறியலாம்.

நாடகக் கலைப்பணி

நாடகக் கலையைத் திட்டமிட்டு முறையாக வளர்க்க எண்ணிய சம்பந்த முதலியார் அதற்காக ஓர் அமைப்பை உருவாக்க விரும்பினார். அவ்வாறு உருவான அமைப்பே **சுகுணவிலாச சபை**. இது, தொழில் முறை அல்லாத நாடக சபையாகும். இதனை, ஆங்கிலத்தில் **அமெச்சூர் சபா** என்று கூறுவர். 1891ஆம் ஆண்டு இச்சபை நிறுவப்பட்டது.

குணவிலாச சபையின் தோற்றமும், சம்பந்த முதலியார் அச்சபைக்காக எழுதிய பல்வேறு வகைப்பட்ட நாடகங்களும் தமிழ் நாட்டில் பல அமெச்சூர் நாடக சபைகளைத் தோற்றுவித்தன.

அமெச்சூர் நாடக சபையாகத் தன் சபையைச் சம்பந்த முதலியார் அமைத்து நாடகத்தை உருவாக்கி நடித்தார். அதே வேளையில் அவரது நாடகங்கள் தொழில் முறை நாடக சபையினராலும் திறம்பட நடித்துக் காட்டப்பட்டன.

சுகுணவிலாச சபையில் ஆர்.கே. சண்முகம் செட்டியார், சத்தியமூர்த்தி அய்யர், சர்.சி.பி. இராமசாமி அய்யர் போன்ற பெரியவர்களெல்லாம் நடித்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

பம்மல் சம்பந்த Kதயpயார்

சபாபதி (நாடகம்)

chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://www.projectmadurai.org/pm_etexts/pdf/pm0425.pdf

Acknowledgements: Our Sincere thanks go to the Tamil Virtual Academy (aka Tamil Virtual University) for providing us with scanned images version of the work online. Etext preparation and proof-reading: This etext was produced through Distributed Proof-reading approach. We thank the following persons in the preparation and proof-reading

நாடக மேடை நினைவுகள்

ராவ் பகதூர்
பம்மல் சம்பந்த முதலியார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

https://ta.wikisource.org/wiki/%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%9F%E0%AE%95_%E0%AE%AE%E0%AF%87%E0%AE%9F%E0%AF%88_%E0%AE%A8%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%88%E0%AE%B5%E0%AF%81%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D

உள்ளடக்கம்

என் சுயசரிதை

நாடகப் பேராசிரியர்

பம்மல். சம்பந்த முதலியார்

https://ta.wikisource.org/wiki/%E0%AE%8E%E0%AE%A9%E0%AF%8D_%E0%AE%9A%E0%AF%81%E0%AE%AF%E0%AE%9A%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%A4%E0%AF%88

உள்ளடக்கம்

நான் கண்ட நாடகக் கலைஞர்கள்

நாடகப் பேராசிரியர்

ப. சம்பந்த முதலியார், பத்மபூஷண்

https://ta.wikisource.org/wiki/%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%A9%E0%AF%8D_%E0%AE%95%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%9F_%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%9F%E0%AE%95%E0%AE%95%E0%AF%8D_%E0%AE%95%E0%AE%B2%E0%AF%88%E0%AE%9E%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D

உள்ளடக்கம்

- திரு. சுந்தர ராவ்
- திரு. குப்பண்ண ராவ்
- திரு.நாராயணசாமி பிள்ளை
- திரு. சுப்பிராய ஆசாரி
- திரு. சுந்தர ஆசாரி
- திரு. கன்னையா
- திரு. கிட்டப்பா அவர்கள்
- ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள்
- திரு. எம். சுந்தசாமி முதலியார்
- திரு. சங்கரதாஸ் சுவாமிகள்
- திரு. சிவஷண்முகம் பிள்ளை
- திரு. கிருஷ்ணசாமி பாவலர்
- திரு. சந்தானகிருஷ்ண நாயுடு
- திரு. டி. கே. ஷண்முகம்
- திரு. டி. கே. பகவதி
- திரு. சகஸ்ரநாமம் அவர்கள்
- திரு. நவாப் ராஜமாணிக்கம்
- திரு. கே. ஆர். ராமசாமி
- திரு. T. R. ராமச்சந்திரன்
- திரு. M. G. ராமச்சந்திரன்
- திரு சிவாஜி கணேசன்
- திரு. புத்தனேரி ரா. சுப்ரமணியம்
- திருமதி. பாலாம்பாள்
- திருமதி. P. பாலாமணி அம்மாள்
- ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீனிவாச ஐயங்கார்
- ஸ்ரீ S. சத்தியமூர்த்தி
- ஸ்ரீ T. ஸ்ரீனிவாச ராகவாச்சாரி
- வி. வெங்கடாசலையா
- ஸ்ரீமான் வி.ஸி கோபாலரத்தினம்
- திரு. P. S. தாமோதர முதலியார்
- ஸ்ரீ. E. கிருஷ்ணய்யர் அவர்கள்
- ஸ்ரீ. கே. நாகரத்தினம் ஐயர்
- B. ராமமூர்த்தி
- திரு. C. பாலசுந்தர முதலியார்
- திரு. வேல் நாயர்
- ஸ்ரீமான் அனந்த நாராயண ஐயர்
- G. C. V. ஸ்ரீனிவாசாச்சாரியார்

நாடகத் தமிழ்

நாடகப் பேராசிரியர்

ப. சம்பந்த முதலியார், பி. ஏ., பி. எல்.

https://ta.wikisource.org/wiki/%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%9F%E0%AE%95%E0%AE%A4%E0%AF%8D_%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AF%8D

உள்ளடக்கம்

SIVA
TEMPLE ARCHITECTURE etc.
IN TAMIL

BY

Rao Bahadur P. SAMBANDAM, B.A., B. L

https://ta.wikisource.org/wiki/Siva_Temple_Architecture_etc.

PREFACE

This is not a scientific treatise, but a popular primer to interest saivites in their temple architecture etc. I have called this small book "Sivalaya Silpangal etc." because most of the examples I have referred to are about saivite temples, but almost all the remarks will equally apply to Vishnu temples also ; I have also to. mention that the word 'Silpam' in Tamil includes architecture, sculpture, and painting also.

The one great defect of this book is that I have not been able to publish illustrations of the various things mentioned herein; as a great authority says, "an illustration would probably show clearly what has to be described in several pages even "... I have collected the illustrations necessary, but the great cost of preparing blocks thereof and the scarcity of suitable paper to print them, have made me guilty of omitting to illustrate this book. I hope to rectify this defect in the second edition, by which time I hope and trust that the necessary materials could be had for their pre-war-price.

Another difficulty I had to contend with was, that I could not find suitable words in Tamil to translate English words and expressions used in standard English works like those of the late Sir J. Fergusson, Burgess etc. In this and other respects I will be immensely thankful to my readers if they would send me suitable words and expressions better than those that I have used. I will also be thankful for any corrections in the mistakes that I might have made in writing this book, for I claim no originality herein.

I have to conclude by saying, that I intend this work as a sort of introduction to another voluminous work entitled "Siva shrines in India— and beyond" which I have begun publishing. .


P. SAMBANDAM.

பொருளடக்கம்

- திராவிட சில்பம்
- சிவாலய அமைப்பு
- திராவிட சிவாலயப் பிரிவுகள்
- கோயில்களின் காலத்தை அறிதல்
- சிவாலய ஜீரனோத்தாரணம்
- சிற்ப வேலைப்பாடுகள்
- சிவாலயங்களில் கல் வெட்டுகள்
- பெரிய சிவாலயங்களில் சிறு சிவாலயங்கள்
- மாற்றப்பட்ட சிவாலயங்கள்
- அழிக்கப்பட்ட பூர்வீக சிவாலயங்கள்
- கோட்டைகளாக

திரைப்படங்களாக்கப்பட்ட நாடகங்கள்

- காலவா ரிஷி (1932)
- சதி சுலோச்சனா (1934, கதை, வசனம், இயக்கம், நடிப்பு)
- மனோகரா (1936, கதை, வசனம், இயக்கம், நடிப்பு)
- ரத்னாவளி (1935)
- யயாதி (1938)
- ராமலிங்க சுவாமிகள் (1939)
- சந்திரஹரி (1941)
- ஊர்வசி சாகசம் (1940)
- தாசிப் பெண் (1943)
- சபாபதி (1941)
- வேதாள உலகம் (1948)



பம்மல் சம்பந்த முதலியாரின் கையெழுத்து

சீர்திருத்தங்கள்

- கால நேரம் நிர்ணயிக்காமல் நடந்துகொண்டிருந்த நாடகத்தை, 3 மணி நேரம் என ஒரு கால அளவுக்குள் கொண்டுவந்தார்.
- கதை, நடிப்பு, இயக்கம், நவீன கருத்துகள்கொண்ட வசன உச்சரிப்பு, சீர்த்திருத்தமான காட்சியமைப்பு, நடிப்பு ஆகியவற்றில் மாற்றம் கொணர்ந்தார்.
- நாடக மேடை, நடிக்கும் முறை, நடிகர்கள் தேர்வு முறை போன்றவற்றில் சீர்திருத்தம் செய்தார்.
- அக்காலத்தைய கலை மற்றும் அரசியல் நிகழ்வுகளுக்கு ஏற்ப செயல்படும் பாங்கான நாடகங்களை எழுதினார்.
- மேல்நாட்டு அமைப்பு முறையிலான நாடகமாக்கம் செய்தார்.
- தமிழ் நாடகத்தில் தலைப்பு தொடங்கி தொழில்நுட்பம் வரையிலான அனைத்துத் துறையிலும் புதுமையைப் புகுத்தினார்.
- நகரங்களில் பிரம்மாண்டமாக மேடை அமைத்து பல வகையான நாடகங்களை வெற்றிகரமாக நடத்தி, மேல்தட்டு மக்கள், கற்றவர்கள், அறிஞர்களையும் பார்க்க வைத்தார்.
- சுப முடிவு என்ற வழக்கத்தை மாற்றி, சோக முடிவு கொண்ட நாடகங்களையும் அரங்கேற்றினார்.
- நடிப்பவர்களை 'கூத்தாடிகள்' என்று அழைக்காமல் 'கலைஞர்கள்' என்று அழைக்கச் செய்தார்.
- திட்டமிடப்பெற்ற நாடக ஒத்திகை மேற்கொள்வதைக் கட்டாயமாகக் கடைப்பிடித்தார்.
- நாடக உரையாடல்களை உள்ளபடியே பேசி நடிக்க வேண்டுமென்பதில் கண்டிப்புக் காட்டினார்.
- நாடகங்களின் இயல்புத் தன்மைக்கு முக்கியத்துவம் தந்தார்.
- படித்தவர்களை நடிக்க வைத்து நல்ல பார்வையாளர்களை உருவாக்கினார்.
- வேற்றுமொழி நாடகங்கள், மேனாட்டு நாடகங்கள் என புதிய நாடகங்களை அறிமுகப்படுத்தினார்.
- நாடகங்களில் முக்கியப் பாத்திரம் வசனம் பேச மற்றவர்கள் ஒரு சங்கடமான முகபாவத்துடன் இருப்பதை பம்மல் சம்பந்தம் முதலியார் "அவல் மென்று கொண்டிருப்பது" என்று பெயரிட்டு, அவர்களை ஏதேனும் இயல்பான செய்கைகள் (by-play) புரிய வேண்டும் என்றார்.
- பாடல்கள் நிறைந்த நாடக மேடைகளில் பாடல் இல்லாமல் உரைநடையாகவே நாடகங்களை இயற்றினார்.
- இசையை நாடகத்துக்கு இடையே பாடலாக இல்லாமல் பின்னணிக்கு உதவும் வகையில் இடம்பெறச் செய்தார்.
- வசனங்களில் அடுக்குமொழிகளை விடுத்து நேரிடையான எளிய வாக்கியங்களை அமைத்தார்.

சுகுண விலாச சபா



சுகுணவிலாச சபை - பம்மல் சம்பந்தனாரின் திருவுருவச் சிலை



சுகுணவிலாச சபை 1895

ஜூலை 1, 1891-ல் நண்பர்களுடன் சேர்ந்து 'சுகுண விலாச சபா' என்ற நாடக சபையை நிறுவினார். நாடக அரங்காற்றுகை செய்து, நடித்தார். டாக்டர்கள், வக்கீல்கள் போன்றோர் சுகுண விலாச சபா நாடகங்களில் நடிக்க ஊக்குவித்தார். முதன்முதலில் 1893-ல் கோவிந்தராவ் நாடகக் கம்பெனி நடத்திய 'ஸ்திரி சாகசம்' நாடகத்தைத் தழுவி 'புஷ்பவல்லி' என்ற நாடகத்தை உரைநடை வடிவில் எழுதி சென்னை விக்டோரியா ஹாலில் அரங்கேற்றி நடித்தார். 22-ஆவது வயதில் 'லீலாவதி-சுலோசனா' என்ற அவரது முதல் நாடகம் அரங்கேறியது. ஷேக்ஸ்பியரின் உலகப் புகழ்பெற்ற ஹாம்லெட்(Hamlet), ஆஸ் யு லைக் இட்(As you like it) மெக்பெத்(Macbeth) உட்பட பல நாடகங்களை அவற்றின் நயம், சுவை குறையாமல் தமிழ் நாடகங்களாக ஆக்கினார். ஆங்கில, வடமொழி நாடகங்களை தமிழ்ச் சூழலுக்கு ஏற்ப மாற்றியமைத்து மேடையேற்றினார்.இன்பியலும், அங்க அசைவு மிக்க நகைச்சுவைகளுமே மிகுந்திருந்தன. சம்பந்த முதலியார். இன்பியலில் சமூக உணர்வுகளை

உட்புகுத்தி நாடகமாக்கினார். மனோகரன், இருசகோதரிகள், தாசிப்பெண், புஷ்பவல்லி, உத்தமபத்தினி போன்ற நாடகங்கள் இவ்வகை நாடகங்களாகும்.புராண இதிகாச வடிவ நாடகங்களே புகழ் பெற்றிருந்த அக்காலகட்டத்தில் கர்ணன், சிறுத்தொண்டர் போன்ற கதைகளைத் தேர்ந்தெடுத்து சில மாற்றங்களை செய்து. அது மக்களிடம் வரவேற்பு பெற்ற பிறகு சமூகக் கதைகளை நாடக வடிவில் எழுதினார். நாட்டுப்புறக் கதைப் பாடல்களையும் நாடகமாக்கினார். நல்லதங்காள், சாரங்கதாரன் போன்றன இவற்றுள் அடங்கும். தொன்ம (புராண)க் கதைகளையும் சம்பந்த முதலியார் மக்களுக்கான நாடகமாக்கினார். யயாதி, காலவரிஷி, சிறுத்தொண்டன், மார்க்கண்டேயன் போன்றவை குறிப்பிடத்தக்கன. சமுதாயச் சீர்கேடுகளை வெளிப்படுத்தும் வண்ணம் பல அங்கத நாடகங்களை (Satirical Plays) எழுதியுள்ளார். சபாபதி நாடகம் (ஆறு பாகங்கள்) இவற்றுள் குறிப்பிடத்தக்கதாகும். அரிச்சந்திரன் நாடகக் கதையைப் பெயர் மாற்றி சந்திரகரி என்ற பெயரில் நையாண்டி செய்தார். பொய்யை மட்டுமே பேசுபவனாகச் சந்திரகரி படைக்கப்பட்டான். சம்பந்த முதலியார் எழுதிய இரண்டு நண்பர்கள், இரத்தினாவளி, காலவ ரிஷி, வேதாள உலகம், லீலாவதி சுலோசனா, சபாபதி, கள்வர் தலைவன் ஆகிய நாடகங்கள் தொழில் முறையில் நடிக்கப் பெற்ற வெற்றிகரமான நாடகங்கள். புஷ்பவல்லி, சுந்தரி, லீலாவதி, சுலோசனா, கள்வர் தலைவன், யயாதி, மனோகரா, சாரங்கதாரா, இரண்டு நண்பர்கள், முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், ரத்னாவளி, காலவரிஷி, மார்க்கண்டேயர், அமலாதித்தியன், வாணீபுர வணிகன், சபாபதி, வேதாள உலகம், பொன் விலங்கு, மகபதி, சிறுத்தொண்டர், அரிச்சந்திரன், வள்ளி மணம், கொடையாளி கர்ணன், சகுந்தைலை, காளப்பன் கள்ளத்தனம், நல்லதங்காள், ஏமாந்த இரண்டு திருடர்கள், ஸ்திரி ராஜ்யம், இந்தியனும் ஹிட்லரும், கலையோ காதலோ போன்றன சம்பந்த முதலியாரின் குறிப்பிடத்தக்க நாடகப் படைப்புகள். இவரது குழுவில் ஆண்களே பெண் வேடமிட்டனர். இந்தியாவில் உள்ள பல மாநிலங்களிலும் இலங்கையிலும் சம்பந்த முதலியார் நாடகங்கள் அரங்கேற்றம் செய்தார்.



மனோகரா

துருவன் கதையின் தாக்கத்தால் 'மனோகரா' என்ற புகழ்பெற்ற கதையை எழுதி அதை நாடகமாக்கினார். சம்பந்த முதலியாரின் மனோகரா நாடகம் தமிழ் நாடக மேடையில் குறிப்பிடத்தக்க சிறப்பினைப் பெற்றது. தமது படைப்புகளில் மனோகரா நாடகம் முதன்மையானது எனச் சம்பந்த முதலியார் குறிப்பிடுகிறார். மனோகரா நாடகம் 70 ஆண்டுகளுக்கு மேல் தமிழ் நாடக மேடையில் தன் செல்வாக்கினைச் செலுத்தியது. தொழில் முறை நாடக சபையினர் அனைவரும் இந்த நாடகத்தை நடத்தினர். அனுமதி பெற்றே 859 முறை இந்நாடகம் நடத்தப்பட்டுள்ளது. பிற்காலத்தில் மனோகரா நாடகம் திரைப்படமாகவும் வெளிவந்து வெற்றியை ஏற்படுத்தியது.

நாடக மேடை நினைவுகள்

ஆசிரியர் பம்மல் சம்பந்த முதலியார்

அணிந்துரை

https://ta.wikisource.org/wiki/%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%9F%E0%AE%95_%E0%AE%AE%E0%AF%87%E0%AE%9F%E0%AF%88_%E0%AE%A8%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%88%E0%AE%B5%E0%AF%81%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D/%E0%AE%85%E0%AE%A3%E0%AE%BF%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%81%E0%AE%B0%E0%AF%88

முனைவர் ச. சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

'தமிழ் நாடகத் தந்தை' என்றும், 'நாடகப் பேராசிரியர்' என்றும், 'தமிழ் மேடை நாடகத்தின் சேக்சுபியர்' என்றும் நாடகக் கலைவாணர்களால் போற்றிப் பாராட்டப்பட்டவர் பம்மல் சம்பந்த முதலியார். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ் நாடகத்தின் நிலை மிகவும் இரங்கத்தக்கதாக இருந்தது. கற்றவர்களால் நாடகக் கலை வெறுத்து ஒதுக்கப்பட்டது. இத்தகைய காலக் கட்டத்தில் பம்மல் சம்பந்த முதலியார் தமிழ் நாடகத் துறைக்குள் நுழைந்தார். தமிழ் நாடகத்திற்குப் புத்துணர்வும் புதுப்பொலிவும் தந்தார். அவர் இதிகாச நாடகங்களையும், புராண நாடகங்களையும் நடத்தி வந்த தொழில்முறை நாடகக் குழுவினரின் போக்கையும் மாற்றினார். அவர்கள் வரலாறு மற்றும் சமூக நாடகங்கள் நடிக்கத் தூண்டுகோலாக அமைந்தார்.

நாடக நடிகர்களைக் கூத்தாடிகள் என்று அழைக்கப்பட்ட வழக்கத்தை மாற்றி, அவர்களைக் கலைஞர்கள் என்று சிறப்பாகக் குறிப்பிடும் நிலைக்கு உயர்த்தினார். தமிழ் நாடக வரலாற்றில் பம்மல் சம்பந்த முதலியாரின்

பங்களிப்பு மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. ஆங்கில நாடகங்களையும், வடமொழி நாடகங்களையும் தமிழில் மொழி பெயர்த்து, அவற்றை மேடைகளில் நடித்துத் தமிழ் நாடகத்திற்கு ஒரு புது வடிவத்தைத் தந்தார். அவர் காலத்துத் தமிழ் நாடகங்களில் பாடல்கள் அதிகமாக இருந்தன. அத்துடன் பாடல்களின் விளக்க உரையாடல்கள் மிகவும் குறைந்த அளவில் இடம் பெற்றிருந்தன.

பம்மல் சம்பந்த முதலியார் ஆங்கில நாடகங்களின் அமைப்பைப் பின்பற்றி உரைநடையில் நாடகங்களைப் படைத்தார்.

நாடகக் கலையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட பம்மல் சம்பந்த முதலியார் 9.2.1873இல் சென்னையில் பிறந்தார். மாநிலக் கல்லூரியிலும் பின்னர்ச் சட்டக் கல்லூரியிலும் படித்து பி.ஏ., பி.எல். பட்டங்கள் பெற்றார். சில காலம் வழக்கறிஞராகவும், நீதியரசராகவும் பணியாற்றினார். 24.9.1967இல் மறைந்தார்.

பம்மல் சம்பந்த முதலியார், நாடகத்திற்கு ஆற்றிய தொண்டு தமிழர்கள் என்றும் நினைவில் வைக்கத் தக்கது. கற்றவர்களும் நல்ல குடும்பத்தைச் சார்ந்தவர்களும் தமிழ் நாடகத்தைப் பார்க்க மாட்டார்கள் என்ற கருத்து பம்மல் சம்பந்த முதலியார் நாடகங்களால் மாற்றம் பெற்றது. உயர் குடியில் பிறந்தவர்களையும் புகழ் பெற்ற அரசியல்வாதிகளையும், அறிஞர்களையும் பம்மல் சம்பந்த முதலியார் தம்முடைய நாடகங்களில் நடிக்கச் செய்தார். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் சர். சி.பி. இராமசாமி அய்யர், தேசிய இயக்கத்தின் தலைவராக விளங்கிய சத்தியமூர்த்தி, முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ஆர்.கே. சண்முகம் செட்டியார் முதலியோர் ஆவார்கள். அக்காலத்தில் நீதி மன்றத்தில் நீதியரசராகப் பணியாற்றிய பி.வி. சீனிவாச அய்யங்கார் அவர்கள் பம்மல் சம்பந்தனாரின் நாடகப் பணிக்குத் துணை செய்தார்.

நாடகம் என்பது தெருக்கூத்து என்றும், சிற்றூர் மக்கள் மட்டும் அதனைக் கண்டுகளிப்பர் என்றும் நிலவிய கருத்தை மாற்றி நல்ல மேடை அமைத்து, பலவகை நாடகங்களை நடத்தித் தமிழ் நாடகத்தை மேம்படுத்தினார்.

தற்போதுள்ள போக்குவரத்து வசதிகள் அறவே இல்லாத அக்காலக்கட்டத்தில், பம்மல் சம்பந்த முதலியார் தன்னுடைய நாடகங்களை இந்தியாவில் உள்ள நகரங்களிலும் கடல் கடந்து பர்மா, இலங்கை முதலிய நாடுகளிலும் மேடை ஏற்றினார். இலங்கையில் அவருடைய நாடகங்களைப்

பார்த்த கலையரசு சொர்ணலிங்கம் என்பவர், பிற்காலத்தில் ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சிக்குப் பாடுபட்டார். அவர் பம்மல் சம்பந்த முதலியாரைத் தன்னுடைய ஆசான் என்று குறிப்பிட்டுள்ளார்.

அக்காலத்தில் நடத்தப்பட்ட நாடகங்கள் அனைத்தும் இன்பியல் முடிவுடையன. சம்பந்த முதலியார் அந்நிலையை மாற்றி ஆங்கில நாடகங்கள் அமைப்பைப் போன்று, இன்பியலும் துன்பியலும் கலந்து வரும் நாடகங்களைப் படைத்தார். தமிழ் நாடக மேடையில் செய்த பெரிய புரட்சி இதுவாகும்.

ஆங்கில நாடகங்களையும், வடமொழி நாடகங்களையும் அரங்கேற்றும்போது அவற்றைத் தமிழ்ச் சூழலுக்கு ஏற்றவாறு மாற்றி அமைத்தார். அதன் விளைவாக வேற்று மொழி நாடகங்கள் தமிழர்களுக்கு அந்நிய நாடகங்களாக ஆகாமல் தடுத்தார்.

வடமொழி, ஆங்கிலம், பிரெஞ்சு, செர்மன், லத்தீன் முதலிய மொழிகளிலிருந்து அரங்கேற்றியதன் மூலம் நாடகம் பற்றிய பரந்த - விரிந்த பார்வையைத் தமிழக மக்களிடம் ஏற்படுத்தினார்.

பம்மல் சம்பந்த முதலியார் ஆங்கிலம், வடமொழி, பிரெஞ்சு, செர்மன், லத்தீன் முதலிய மொழிகளிலிருந்து நாடகங்களைத் தமிழில் மொழி பெயர்த்தார். அவருடைய மொழிபெயர்ப்பு, தமிழ் நாடகக் கலைக்குக் கிடைத்த பெருஞ் செல்வமாகும். "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும்" என்ற மகாகவி பாரதியாரின் கருத்தை மெய்ப்பித்துள்ளார்.

அந்நாட்களில் தமிழ் நாடகங்கள் விடிய விடிய நடக்கும். அந்நிலையை மாற்றித் தமிழ் மேடை நாடகங்களை மூன்று மணி நேரத்திற்குள் முடிக்க வேண்டும் என்று காலத்தைச் சுருக்கிய பெருமை சம்பந்த முதலியார் அவர்களையே சாரும். இவ்வாறு நாடகத்திற்குரிய கால எல்லையை வரன்முறை செய்தவர் பம்மல் சம்பந்த முதலியார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாடகங்களை எழுதுகின்ற ஆசிரியர்கள் அவர்கள் படைத்துள்ள நாடக மாந்தர்களின் உள்ளுணர்வுப் போராட்டங்களை விவரிக்க வேண்டும். அவ்வாறு விவரிக்கும்போது அந்நாடகங்களைப் பார்க்கின்ற மாந்தர்களுடைய மனங்களும் தூய்மை பெறும் என்று நாடக ஆய்வாளர்கள்

கூறுகின்றனர். பம்மல் சம்பந்த முதலியார் இயற்றிய 'மனோகரா', 'இரு நண்பர்கள்' முதலியவை இவ்வகையைச் சார்ந்தவை.

பம்மல் சம்பந்த முதலியார் 94 நாடகங்கள் எழுதியுள்ளார். அவை பின்வருமாறு : 1. புஷ்பவல்லி 2. சுந்தரி (அல்லது) மெய்க்காதல் 3. இரு சகோதரிகள் (அல்லது) லீலாவதி - சுலோசனா 4. கள்வர் தலைவன் 5. யயாதி 6. மனோகரன் 7. சாரங்கதரன் 8. இரண்டு நண்பர்கள் 9. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் 10. ரத்னாவளி 11. சத்ருஜித் 12. காலவ ரிஷி 13. நற்குலத் தெய்வம் 14, கண்டுபிடித்தல் 15. மார்க்கண்டேயர் 16. விரும்பிய விதமே 17. காதலர் கண்கள் 18. பேயல்ல பெண்மணியே 19. வாணீபுர வணிகன் 20. அமலாதித்யன் 21. சபாபதி - 1 பாகம் 22. சபாபதி துணுக்குகள் 23. சிம்ஹளநாதன் 24. வேதாள உலகம் 25. மகபதி 26. பொன்விலங்குகள் 27. ஹரிச்சந்திரன் 28. கோனேரி அரசகுமாரன் 29. சிறுத்தொண்டர் 30. சந்தையிற் கூட்டம் 31. ரஜபுத்ர வீரன் 32. சபாபதி - II பாகம் 33. விஜயரங்கம் 34. ஊர்வசி சாபம் 35. புத்த அவதாரம் 36. வள்ளி மணம் 37. சபாபதி - III பாகம் 38. சந்திரஹரி 39. சபாபதி - IV பாகம் 40. தாசிப் பெண் 41. மனைவியால் மீண்டவன் 42. சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து 43. விச்சுவின் மனைவி 44. இடைச்சுவர் இருபுறமும் 45. இந்தவிதமும் 46. விபரீதமான முடிவு 47. சுல்தான்பேட்டை சப் அசிஸ்டென்ட் மாஜிஸ்டிரேட் 48. நோக்கத்தின் குறிப்பு 49. இரண்டு ஆத்மாக்கள் 50. சாகுந்தலை 51. சுபத்ரா - அர்ஜுனா 52. விக்ரமோர்வசி 53. மாளவிகாக்னிமித்ரம் 54. கொடையாளி கர்ணன் 55. சஹாதேவனின் சூழ்ச்சி 56. உண்மையான சகோதரன் 57. காளப்பன் கள்ளத்தனம் 58. பிராமணனும் சூத்திரனும் 59. உத்தமபத்தினி 60. குறமகள் 61. வைகுண்ட வைத்தியர் 62. சதி சுலோசனா 63. நல்லதங்காள் 64. ஏமாந்த இரு திருடர்கள் 65. சபாபதி - V பாகம் 66. சோம்பேறி சகுனம் பார்த்தல் 67. கண்டதும் காதல் 68. காவல்காரர்களுக்குக் கட்டளை 69. மன்மதன் சோலை 70. ஸ்திரீ ராஜ்யம் 71. மாண்டவர் மீண்டது 72. அஸ்தினாபுரத்து நாடக சபை 73. சங்கீதப் பைத்தியம் 74. இருவரும் கள்வர்களே 75. கணநாதனும் அவனது அமைச்சர்களும் 76. பாடலிபுரத்துப் பாடகர்கள் 77. புத்திசாலிச் சிறுவன் 78. விருப்பும் வெறுப்பும் 79. ஆலவீரன் 80. பிறந்தவூர் 81. ஜமீன்தாரின் வருகை 82. ஸ்திரீ சாகசம் 83. சபாபதி ஜமீன்தார் 84. மனை ஆட்சி 85. சதிசக்தி 86. கலையோ காதலோ 87. இந்தியனும் ஹிட்லரும் 88. தீயின் சிறு திவலை 89. தீபாவளி வரிசை 90. துவிபாஷி சபாபதி 91. இல்லறமும் துறவறமும் 92. சபாபதி

சினிமா 93. நான் குற்றவாளி 94. மனைவியைத் தேர்ந்தெடுத்தல் என்பனவாகும்.

பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய 94 நாடகங்களில் முதன் முதலாக அச்சிடப்பட்ட நாடகம் 'லீலாவதி - சுலோசனா' ஆகும். இந் நாடகம் 1895ஆம் ஆண்டு சனவரித் திங்களில் வெளிவந்தது. இந்நாடக நூலுக்குப் பம்மல் சம்பந்தனாரின் உயர்நிலைப் பள்ளி ஆசிரியரான முருகேச முதலியார், மாநிலக் கல்லூரித் தமிழாசிரியர் கிருஷ்ணமாச்சாரி, கிருத்துவக் கல்லூரித் தமிழாசிரியர் பரிதிமாற்கலைஞர், பூவை கல்யாணசுந்தர முதலியார், திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளை, தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதையர், தமிழ்ச்சுவடி பதிப்புத் துறையின் முன்னோடிகளில் ஒருவரான சி.வை. தாமோதரம் பிள்ளை, மனோன்மணீயம் நாடக ஆசிரியர் சுந்தரம் பிள்ளை முதலியோர் சாற்றுக் கவிகள் வழங்கியுள்ளனர்.

பம்மல் சம்பந்தனார் எழுதிய இராமலிங்க சுவாமிகள், விசுவாமித்திரர் எனும் இரு நாடகங்கள் இன்னும் கிடைக்கவில்லை என்று நாடக ஆய்வாளர் முனைவர் ஏ.என். பெருமாள் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றை இதிகாச, புராண நாடகங்கள் என்றும் வரலாற்று நாடகங்கள் என்றும் சமூக நாடகங்கள் என்றும் மொழிபெயர்ப்பு நாடகங்கள் என்றும் பிரிக்கலாம். இந்நாடகங்கள் சுகுண விலாச சபாவில் அரங்கேறின.

சுகுண விலாச சபா நடத்திய அனைத்து நாடகங்களிலும் பம்மல் சம்பந்த முதலியார் நடித்துள்ளார். மனோகரா நாடகத்தில் மனோகரனாகவும், பின்னர்ப் புருடோத்தமனாகவும் நடித்துள்ளார். 'சபாபதி' நாடகத்தில் சபாபதி முதலியாராகவும் அவருடைய பணியாளராகவும் நடித்துள்ளார்.

மேலும் 'சிறுத்தொண்டர்' நாடகத்தில் சித்திரபுத்திரனாகவும் 'காலவ ரிஷி' என்ற நாடகத்தில் நாரதராகவும் சிறிய வேடங்களில் நடித்துள்ளார். மேலும் பெண் வேடம் புனைந்தும் நடித்துள்ளார்.

நாடகத்தில் பெரிய பாத்திரங்களில் மட்டுமன்றி இங்ஙனம் சிறிய பாத்திரங்களில் நடித்ததால் அவர் மேலும் புகழ் பெற்றார். நாடகத்தில் தலைவனாக நடித்தவர்கள் மற்றச் சிறிய பாத்திரங்கள் ஏற்று நடிக்க முன்வர மாட்டார்கள் என்ற கருத்தை முறியடித்தார்.

'இரண்டு நண்பர்கள்' எனும் நாடகத்தில் சுந்தராதித்யனுக்கு இறுதியில் பைத்தியம் பிடித்துவிடுகிறது. அப்பாத்திரத்தை ஏற்று நடிக்க பம்மல்

சம்பந்தனார், மன நோயாளிகளின் செயல்களை இரு திங்கள் மருத்துவமனையில் இருந்து நுணுகி அறிந்த பின்பு அவ்வேடத்தில் நடித்தார்.

சேக்சுபியரின் '**ஹேம்லட்'** நாடகத்தில் நடிப்பதற்கு முன்னர் அந்நாடகத்தில் ஆங்கிலத்தில் நடித்த **எட்மண்ட் கீன், எட்வின் பூத்,** கெம்பிள் ஆகியோர் நடிப்பைக் கூர்ந்து ஆராய்ந்து அதன் பின்னரே அப்பாத்திரத்தில் நடித்தார்.

மொழி பெயர்ப்பு நாடகங்களான **சாகுந்தலை, மாளவிகாக்னிமித்ரம், விக்ரமோர்வசி, ரத்னாவளி** முதலிய வடமொழி நாடகங்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். சேக்சுபியர் ஆங்கிலத்தில் எழுதிய '**Hamlet'** என்ற நாடகத்தை **அமலாதித்யன்** என்றும், '**As you Like it'** என்ற நாடகத்தை '**விரும்பிய விதமே'** என்ற பெயரிலும் '**Cymlealine'** என்ற நாடகத்தை '**சிம்ஹளநாதன்'** என்றும், '**Merchant of Venice'** என்ற நாடகத்தை '**வாணீபுரத்து வாணிகன்'** என்றும், **'Macbeth'**என்ற நாடகத்தை '**மகபதி'** என்றும், பிரஞ்சு மொழியிலுள்ள '**The knavery of Scalphin'** என்ற நாடகத்தை '**காளப்பன் கள்ளத்தனம்'** என்றும் தமிழில் மொழி பெயர்த்தார்.

சுகுண விலாச சபையின் நிறுவனராகவும், நாடக ஆசிரியராகவும், நடிகராகவும், நாடக இயக்குநராகவும் விளங்கிய பம்மல் சம்பந்த முதலியார், தாம் படைத்த அனைத்து நாடகங்களையும் அச்சிட்டு வெளியிட்டார்.

பம்மல் சம்பந்த முதலியார் பல்துறைப் புலமை மிக்கவர். நாடகங்கள் எழுதியதுடன், 'பேசும்பட அனுபவங்கள்', 'தமிழ்ப் பேசும் படக்காஷி', 'கதம்பம்', 'தமிழ் அன்னை பிறந்து வளர்ந்த கதை', 'காலக் குறிப்புகள்', 'சிவாலயங்கள்-இந்தியாவிலும் அப்பாலும்', 'சிவாலய சிற்பங்கள்', 'சிவாலய உற்சவங்கள்', 'சுப்பிரமணிய ஆலயங்கள்', 'தீட்சிதர் கதைகள்', 'ஹாஸ்யக் கதைகள்', 'ஹாஸ்ய வியாசங்கள் 'முதலிய நூல்களையும் எழுதியுள்ளார்.

சிறுத்தொண்டர் நாடகத்தில் சிறுத்தொண்டர் மகனான சீராளனாகவும், அரிச்சந்திரன் நாடகத்தில் அரிச்சந்திரன் மகனான லோகிதாசனாகவும் யாரும் நடிக்க அக்காலத்தில் முன்வரவில்லை. எனவே பம்மல் சம்பந்த முதலியார் அவருடைய மகனை அவ்விரு பாத்திரங்களையும் ஏற்று நடிக்கச் செய்தார். நாடகத் துறையில் அவருக்கிருந்த மிகுந்த ஈடுபாட்டை இதன்வழி அறியலாம்.

சம்பந்த முதலியார் நாடகக் கலையை வளர்க்கும் முகத்தான் **'Indian Stage'** (இந்திய நாடக மேடை) என்ற ஆங்கில இதழை நடத்தினார். தமிழ் நாடகத் தோற்றத்தை விளக்கும் வகையில் 'நாடகத் தமிழ்' என்ற நூலை எழுதினார். 'நான் கண்ட நாடகக் கலைஞர்கள்', 'என் சுயசரிதம்', 'நடிப்புக் கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி?' முதலிய நூல்கள் அவருடைய நாடக அனுபவங்களோடு தொடர்புடைய நூற்களாகும்.

பம்மல் சம்பந்த முதலியார் தமக்கு ஏற்பட்ட நாடக அனுபவங்களைத் தொகுத்துப் பிற்காலத் தலைமுறைக்குப் பயன்படும் வகையில் '**நாடக மேடை நினைவுகள்'** என்ற நூலை எழுதினார். இந்நூல் ஆறு தொகுதிகளைக் கொண்டது. நாடக மேடை நினைவுகள் முதல் தொகுதி 1932இலும், இரண்டாம் தொகுதி 1933இலும், மூன்றாம் தொகுதி 1935இலும், நான்காம் தொகுதி 1936இலும், ஐந்தாம் தொகுதி அதே ஆண்டிலும், ஆறாம் தொகுதி 1938இலும் வெளிவந்தன.

இவ்வாறு தனித்தனியாக வெளிவந்த ஆறு தொகுதிகளையும் ஒன்றாகத் தொகுத்து வெளியிட வேண்டும் என்பது நாடக ஆர்வலர்களின் விருப்பம். அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் முகத்தான் ஆறு தொகுதிகளையும் ஒரே நூலாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறது.

பம்மல் சம்பந்த முதலியார், நாடகக் கலையை வளர்ப்பதை வாழ்வின் நோக்கமாகக் கொண்டார். தன்னுடைய வாழ்க்கையை நாடகத்திற்காக அர்ப்பணித்தவர். அவருடைய நாடக வாழ்க்கை , மகிழ்ச்சியான அனுபவங்களையும் கசப்பான உண்மைகளையும் கொண்டது.

'நாடக மேடை நினைவுகள்' என்னும் இந்நூலில் அவருடைய நாடக மேடை அனுபவங்களை நமக்கு எடுத்துக் காட்டுகிறார். நாடகக் கலையை முன்னெடுத்துச் சொல்லும் வகையில் அவர் இந் நூலை எழுதியுள்ளார். அவருடைய 94 நாடகங்களையும் மேடை ஏற்றுகின்ற போது அவருக்கு ஏற்பட்ட அனுபவங்களை இந்நூலில் விளக்கியுள்ளார்.

பம்மல் சம்பந்தனார் இளம் வயதில் தமிழ் நாடகங்களை வெறுத்தார். 'அரிச்சந்திரா' என்ற நாடகத்தைப் பார்க்க அவருடைய நண்பர் அழைத்தபோது அவர் மறுத்தார்.

1891ஆம் ஆண்டு பெல்லாரியில் இருந்து கிருஷ்ணமாச்சார்லு என்ற புகழ் பெற்ற தெலுங்கு நடிகர் 'சரச விநோதினி சபா' என்ற நாடகக் குழுவுடன்

சென்னைக்கு வந்து தெலுங்கு நாடகங்களை மேடையேற்றினார். அந்நாடகங்களைக் கண்ணுற்ற பம்மல் சம்பந்தனார் தமிழிலும் அவை போன்ற நாடகங்களை நடத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டார். கிருஷ்ணமாச்சார்லு நடத்திய நாடகங்களில் ஒன்று 'ஸ்திரீ சாகசம்' என்பதாகும். இந்நாடகத்தைப் பம்மல் சம்பந்தனார் 'புஷ்பவல்லி' என்ற பெயரில் மொழிபெயர்த்தார். 'சரச விநோதினி சபா' என்ற அந் நாடகக் குழுவில் கற்றவர்களும், உயர் பதவியில் உள்ளவர்களும், அரசு அலுவலர்களும் பங்கேற்றிருந்தனர். அதே போன்ற நாடகக் குழுவைச் சென்னையில் அமைக்க வேண்டும் என்று பம்மல் சம்பந்தனார் விரும்பினார். அதன் விளைவாக 1-7-1891ஆம் ஆண்டு 'சுகுண விலாச சபை' என்ற நாடகக் குழுவை உருவாக்கினார். அக்குழுவில் பம்மல் சம்பந்தானாரும் ஊ. முத்துக்குமார சாமி செட்டியார், வி. வெங்கடகிருஷ்ண நாயுடு, அ. வெங்கடகிருஷ்ண பிள்ளை , த. செயராம் நாயகர், ஜி.இ. சம்பந்து செட்டியார், சுப்பிரமணிய பிள்ளை ஆகிய எழுவர் இடம் பெற்றிருந்தனர். பம்மல் சம்பந்தனார் 'புஷ்பவல்லி' என்ற நாடகத்தைத் தொடக்கத்தில் எழுதி இருந்தாலும் சுகுண விலாச சபையின் சார்பாக முதலில் அரங்கேறிய நாடகம் 'சுந்தரி' ஆகும்.

பம்மல் சம்பந்தனார் சுகுண விலாச சபையை நிறுவியதுடன் அந் நாடகக் குழுவுக்கு நிதி ஆதாரம் கேட்டு, சென்னையில் புகழ்பெற்ற செல்வந்தர்களை நாடிச் சென்றார். அவர்களுள் ஒருவர் திவான்பகதூர் பாக்கம் இராசரத்தின முதலியார் ஆவார். பம்மல் சம்பந்தனாரும் அவருடைய நாடகக் குழுவைச் சார்ந்தவர்களும் இராசரத்தினம் அவர்களைச் சந்தித்து, தங்களுடைய நாடகக் குழு வளர நிதி உதவி வழங்கும்படி கேட்டு கொண்டனர். திரு. இராசரத்தினம் " இதுபோன்ற நாடகக் குழுவால் நாட்டிற்கு என்ன பயன்?" என்று கேட்டார். பம்மல் சம்பந்தனார், அதற்குப் பதில் 'சேக்சுபியர் மகா கவியைக் கேளுங்கள்' என்று கூறினார். அதன்பின் இராசரத்தினம் 'சேக்சுபியர் இங்கிலாந்தைச் சார்ந்தவர். அப்படிப்பட்ட நாடக ஆசிரியர் நம் நாட்டில் யார் இருக்கிறார்கள்?' என்று கேட்டார். பம்மல் சம்பந்தனார் 'இன்று இல்லாவிட்டாலும் இனிமேல் அவர் போன்ற நாடக ஆசிரியர்கள் நம் நாட்டில் பிறப்பார்கள்' என்று உறுதியாகப் பதில் அளித்தார்.

பம்மல் சம்பந்தனார் தமிழ் நாடகங்களின்மேல் கொண்டிருந்த ஈடுபாட்டையும், நம்பிக்கையையும் இந் நூலில் காணலாம்.

‘சுகுண விலாச சபா’ என்ற நாடக அமைப்பைச் சென்னையில் உருவாக்கிய பின்னர், இந் நாடகக் குழுவைப் பின்பற்றித் தமிழகத்தில் புதிய நாடகக் குழுக்கள் தோன்றின. அவற்றுள் ஒன்று **'ஓரியன்டல் டிராமேட்டிக் சொசைட்டி'** என்பதாகும். இந் நாடகக் குழு சுகுண விலாச சபா தோன்றுவதற்கு முன்னரே உருவாகி, பின்னர்ச் செயலற்று விட்டது. சுகுண விலாச சபாவுக்குப் பின் மீண்டும் செயல்படத் தொடங்கியது. ‘ஓரியன்டல் டிராமேட்டிக் சொசைட்டி’ என்ற இந் நாடகக் குழுவில் பார்ப்பனர்கள் மட்டுமே இடம் பெற்றிருந்தனர். இந் நாடகக் குழுவினர் பிற சாதியினரைச் சேர்ப்பதில்லை. மேலும் அந் நாடகக் குழு சுகுண விலாச சபையில் நடிகராக இருந்த ரங்கசாமி அய்யங்காரை அவர் பார்ப்பனாராக இருந்ததால் அவர்களுடைய குழுவுக்கு வரும்படி அழைப்பு விடுத்தனர்.

சாதி சமய பேதங்களைக் கடந்த பம்மல் சம்பந்தனார், நாடகக் கலையை வளர்க்கத் தோன்றிய அந் நாடகக்குழு சாதியைப் பாதுகாக்கும் அரணாக மாறியதைக் கண்டு வெகுண்டார். அந் நாடகக் குழுவைக் கடுமையாக இந் நூலில் சாடியுள்ளார்.

அன்றைய தமிழ் நாடகங்களில் உண்மைக்கு மாறாகப் பொருந்தாத நிலையில் உரையாடல்களும், நிகழ்வுகளும் அமைந்திருந்தன. எடுத்துக்காட்டாக அரசன் அவைக்கு வந்தவுடன் அமைச்சரைப் பார்த்து, “மாதம் மும்மாரி மழை பொழிகிறதா? பிராமணர்கள் யாகம் செய்கிறார்களா? சத்திரியர்கள் சரியாகச் சண்டை போடுகிறார்களா? சூத்திரர்கள் வேலை செய்கிறார்களா?” என்று கேட்க, அமைச்சர் அரசனின் ஒவ்வொரு கேள்விக்கும் ஆமாம் என்று பதில் கூறுவார்.

இந் நாடக உரையாடலைக் கேட்ட பம்மல் சம்பந்தனார், இந்த அரசன் ஊரில் மழை பெய்வதைக்கூட அறியாமல் அந்தப்புரத்தில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தானா? என்று கூறி நகைத்ததாக இந் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழில் ஒரு துறையில் நூல்களே இல்லையென்றால் அறிஞர்கள் அத் துறையில் கவனம் செலுத்தி நூல்களைப் படைக்க வேண்டும். அதற்கு மாறாகத் தமிழில் ஒன்றுமே இல்லை என்று எப்போதும் புலம்பிக் கொண்டு இருக்கக்கூடாது. அவ்வாறு கூறுவோர் ‘பெற்ற தாய்க்கு உடை இல்லை’ என்று சொல்வதற்குச் சமமாவர். ‘தாய்க்கு உடை இல்லை’ என்றால் முதலில் வெட்கப்பட வேண்டியவன் மகனாவான். அதற்கு மாறாக அவன் ஊரெல்லாம் சொல்லித் திரிவது இழிந்த செயலாகும். சம்பந்தனார் தமிழில் நல்ல நாடகங்கள் இல்லை என்று வருந்தியதோடு நில்லாமல், நல்ல

நாடகங்களைப் படைத்தார். இப்பொருண்மையை விளக்க பம்மல் சம்பந்தனார் இந்நூலில் ஒரு கதையைக் கூறுகிறார். அக் கதை வருமாறு:

தெனாலிராமனிடம் ஒருவன் வந்து உன் தந்தைக்கு நாளை 'சிரார்த்தம்' என்று கூற, தெனாலிராமன், 'அப்படியானால் நீதான் சிரார்த்தம் செய்ய வேண்டும்' என்று கூறினான். 'உன்னுடைய தந்தைக்கு நான் ஏன் சிரார்த்தம் செய்ய வேண்டும்?' என்று கேட்க, அதற்குத் தெனாலிராமன் 'நீதானே எனக்கு நினைவூட்டினாய்; எனவே நீதான் செய்ய வேண்டும்' என்று பதில் கூறினான். இவ்வாறு தமிழில் நல்ல நாடகங்கள் இல்லை என்று குறை கூறுவோர், அவ்வாறு கூறுவதை விடுத்து நல்ல நாடகங்களை எழுத முற்பட வேண்டும் என்று பம்மல் சம்பந்தனார் இந் நூலில் கூறியுள்ளார்.

பம்மல் சம்பந்தனார் நாடகக் கதையை எழுதும் முறை ஒரு புதுமையானதாகும். பம்மல் சம்பந்தனார் நாடகக் கதையை மனத்தில் அமைத்துக்கொண்ட பின்னர், நோட்டுத்தாளில் பென்சிலால் 'ஏ' என்ற அரசனுக்கு 'பி' என்று ஒரு மகன் இருந்தான். 'சி' என்ற அரசனுக்கு, 'டி', 'இ' என்று இரு புதல்வியர் இருந்தனர். 'ஏ' என்ற அரசன் தன் மகனுக்குத் திருமணம் முடிக்க அமைச்சருடன் ஆலோசனை செய்து முடித்தபின் 'எஃப்' என்ற தூதுவனை 'சி' எனும் அரசனிடம் அனுப்பினான்.

இவ்வாறு கதை அமைப்பை எழுதிக்கொண்ட பின், புதிதாக ஏதாவது தோன்றினால் கதைப்போக்கை மாற்றி எழுதி விடுவதும் உண்டு. நாடகத்திற்கு ஏற்றவாறு காட்சிகளைப் பிரித்தபின்னர் ஏ, பி, சி, டி, இ, எஃப் முதலிய நாடகப் பாத்திரங்களுக்கு அவரவர் பண்புகளுக்கு ஏற்றவாறு பெயர்களைச் சூட்டுவார்.

பம்மல் சம்பந்தனார் எழுதிய நாடகங்களில் ஒன்று 'தாசிப்பெண்'. இந் நாடகத்தை எழுதி அரங்கேற்றிய பின் விமர்சகர் ஒருவர், 'சம்பந்தனாருக்குத் தாசிகளிடம் நிரம்ப அனுபவம் இருக்கும் போலும்; எனவேதான் அவருடைய இந் நாடகத்தில் மிக நுணுக்கமாக தாசிகளைப் பற்றி எழுதியுள்ளார்' என்று குறிப்பிட்டார்.

பம்மல் சம்பந்தனார், அவருடைய விமர்சனத்தை மறுத்து இந் நூலில் எழுதியுள்ளார்.

ஓர் ஊரில் அரசன் ஒருவன் இருந்தான். அவனுடன் அமைச்சரும் துறவியும் இருந்தனர். அமைச்சருக்குத் துறவிமேல் பொறாமை, எனவே துறவி ஒரு

நாள் அரசனிடம் சிற்றின்பம் குறித்து விரிவாகப் பேசிக்கொண்டிருக்கும்போது, அமைச்சர், ‘துறவிக்குச் சிற்றின்பத்தில் அதிக ஈடுபாடு இருக்கும்போலும்’ என்று ஏளனமாகப் பேசினார். துறவி, அமைச்சரின் கருத்துக்கு அப்போது பதில் சொல்லவில்லை.

சில நாள் கழித்துத் துறவி ஏவலரிடம் துருப்பிடித்த வெண்கலப் பாத்திரம் ஒன்றை எடுத்து வரும்படி அரசர் மற்றும் அமைச்சர் முன்னிலையில் சொன்னார். அந்தப் பாத்திரத்தை மலத்துடன் சேர்த்து மண்ணில் புதைத்து வைக்கும்படி கூறினார். சில நாள் கழித்து அரசன் மற்றும் அமைச்சரின் முன் ஏவலாளர் மூலம் அந்தப் பாத்திரத்தை மண்ணில் இருந்து எடுக்கும்படி கூறினார். அப்பாத்திரம் பிரகாசமாயிருப்பதைத் துறவி அரசனிடம் காட்டினார். அருகிலிருந்த அமைச்சர், துறவியிடம், ‘இதிலென்ன புதுமை? மலத்தின் புளிப்பு வெண்கலப் பாத்திரத்தில் இருந்த களிம்பை நீக்கிவிட்டது’ என்று விளக்கிக் கூறிய அமைச்சரை நோக்கி, ‘அமைச்சர் மலத்துடன் அதிக ஈடுபாடு கொண்டு இருப்பார் போலும்’ என்று பதில் உரைத்தார் துறவி.

படைப்பாளர்கள் தங்களுடைய படைப்புகளை அவர்கள் வாழ்வுப் பட்டறிவின் மூலமும், நண்பர்களின் அனுபவங்களின் மூலமும், செவிவழிச் செய்திகளின் மூலமும் படைப்பர். எனவே ‘தாசிப்பெண்’ என்ற நாடகத்தில் பம்மல் சம்பந்தனார் கருத்துப்படி அவர் தாசியோடு தொடர்பு இல்லை என்ற கருத்தை இக்கதையின் வழி அவருக்கு அறிவுறுத்துகிறார்.

பம்மல் சம்பந்தனார் 1891இல் பதினெட்டு வயதில் நாடக மேடை ஏறி நடிக்கத் தொடங்கினார். அத்துடன் நாடகங்களை எழுதவும் தொடங்கினார். அவருடைய பணி அவர் இறக்கும் வரை நீடித்தது. நீண்ட காலம் நாடகத் துறையில் இருந்ததால் அவருடைய நாடக அனுபவங்கள் நமக்கு வழிகாட்டத்தக்கன.

தொடக்கக் காலத்தில் பம்மல் சம்பந்த முதலியாருக்கு நடிப்பில் போதிய பயிற்சி இல்லை என்பதை அவரே இந்நூலில் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ளார். பின்பு நடிப்புத் துறையில் தேர்ச்சி பெற்ற விவரத்தையும் விளக்கியுள்ளார்.

பம்மல் சம்பந்தனார் பல்வேறு நாடகங்களை நடத்தியதுடன் மற்ற நாடகக் குழுக்களின் நாடகங்களைப் பார்த்து அவற்றில் வரும் புதிய உத்திகளைத் தன்னுடைய நாடகங்களிலும் கையாண்டார்.

‘மதராஸ் டிராமடிக் சொசைட்டி’ என்னும் பெயரில் அமைந்த நாடகக் குழு நடத்திய நாடகங்களில் காட்சிகளுக்கு ஏற்பவும் இடங்களுக்கு ஏற்பவும்

திரைகளைப் (Scenic arrangements) பயன்படுத்தியதைக் கண்ணுற்ற பம்மல் சம்பந்தனார், தன்னுடைய நாடகங்களிலும் அந்த முறையைப் பின்பற்றினார்.

மேலும் பாரசீக நாடகக் குழுவினர் நடத்திய நாடகங்களின் திரைகள், பக்கத் திரைகள் (Side wings), மேல் தொங்கட்டான்கள் (Flies) முதலியவை புதிய முறையில் அமைந்திருந்தன. அவற்றைக் கண்ணுற்ற பம்மல் சம்பந்தனார், அவர்கள் பயன்படுத்தியதைப் போன்ற திரைகளைத் தன்னுடைய நாடகங்களிலும் பயன்படுத்தினார்.

பாரசீக நாடகக் குழுவினர் தமிழ் நாடக மேடை அமைப்பில் ஒரு திருப்பத்தை விளைவித்தனர். இதற்கு முன்னர்த் தமிழ் நாடகங்களில், ஒரு காட்சிக்கும் இன்னொரு காட்சிக்கும் இடையே இடைவெளி விடப்பட்டது. இக்குறை பாரசீக நாடகக் குழுவினர் வருகையால் தமிழ் நாடக மேடையில் களையப்பட்டது.

பாரசீக நாடகக் குழுவினர் பாத்திரங்களுக்கு ஏற்ப உடைகள் அணிந்திருந்தனர். அந்நாட்களில் தமிழ் மேடை நாடகங்களில் வறியவர்களாக நடிப்பவர்கள் செல்வந்தர்கள் போல் உடையணிந்திருந்தனர். அத்தகைய பொருந்தாப் போக்கையும் அந்நாடகக் குழு நீக்கிற்று.

நாடக அரங்கில் இடம்பெறும் ஒவ்வொரு காட்சியும் கதை நிகழ்ச்சிக்கு ஏற்ப உடனடியாக மாறுகின்ற காட்சி அமைப்பையும் (Transformation scenes) பாரசீக நாடகக் குழுவினர் தமிழ் நாடக மேடைக்கு அறிமுகப்படுத்தினார்.

அந்நாளில் தமிழ் நாடக மேடையில் பக்க வாத்திய இசைக் கலைஞர்கள் ஓரத்தில் அமர்ந்திருந்தனர். ஆயின் பாரசீக நாடகக் குழுவினர் பக்க வாத்தியக் கலைஞர்களை நாடக மேடைக்கு முன்னர் அமர வைத்தனர். அதன் விளைவாகப் பக்க வாத்தியக் கலைஞர்கள் தமிழ் நாடக மேடையின் முன்னர் அமர்ந்தனர்.

பம்மல் சம்பந்தனார் 'ருக்மாங்கதா' என்ற நாடகத்தை உரையாடல்களும் பாடல்களும் இன்றித் தோற்றக் காட்சிகளின் மூலம் (Tableau vivantes) அமைத்து முதன்முதலில் தமிழில் நாடகத்தை நடத்தினார். இது மௌனக்காட்சி என்ற நாடக வகையைச் சார்ந்தது.

பம்மல் சம்பந்தனார் பல்வேறு ஊர்களில் நாடகங்கள் நடத்தியபோது அவருக்கு ஏற்பட்ட இடையூறுகளால் மனம் நொந்தார். ஆயினும் தமிழ்ச் சான்றோர் பழமொழிகளை நினைவுகூர்ந்து மனவலிமை பெற்றார். நாடகத்தில் நடிக்கும்போது பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகளையும் ஒவ்வொரு காட்சிக்கேற்றவாறு வரவேண்டிய பின்னணிக் காட்சிகளையும் நாடக நுணுக்கங்களையும் பிறர் நடத்தும் நாடகங்களுக்குச் சென்று பார்த்து அவற்றுள் கொள்ள வேண்டியவற்றை அவர் நடத்திய நாடகங்களில் பின்பற்றினார் என்பதை ஒளிவு மறைவின்றி இந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

நாடக மேடையில் அவர் செய்த மாற்றங்களைக் கண்டு முதலில் முகம் சுளித்தவர்கள், பின்னர் அம்மாற்றங்களை முழுமனத்துடன் வரவேற்றனர் என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

நாடக நடிகர்கள் மது அருந்தக் கூடாது என்றும், தன்னைக் காட்டிலும் நடிப்பில் சிறந்தவர்கள் இல்லை என்ற ஆணவம் கொள்ளக் கூடாது என்றும், தன்னோடு நடிப்பவர்களுடன் ஒத்த மனப்பான்மையோடு பழக வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார். நாடக நடிகர்கள் தீய பழக்கங்களை விட்டுவிட்டு நல்ல பழக்கங்களை மேற்கொண்டால்தான் அவர்கள் வாழ்வு செம்மை பெறும் என்றும், சமூகத்தில் அவர்கள் உயர்வாகக் கருதப்பெறுவர்கள் என்றும் நெறிப்படுத்தியுள்ளார்.

'சுகுண விலாச சபையில் சேர வரும் நடிகர்கள் முதலில் சிறிய பாத்திரங்களையே ஏற்று நடிப்பர். பின்னரே அவர்கள் பெரிய பாத்திரங்களை ஏற்று நடிப்பர். இந்நிகழ்ச்சியைப் பம்மல் சம்பந்தனார் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும் நாடகத்தில் நடிக்க வருபவர்கள் உடனடியாகத் தலைவனாகவும், தலைவியாகவும் நடிக்க வேண்டும் என்று விரும்புவது தவறு என்பதை, 'மெத்தையில் படிப்படியாக ஏறுவதை விடுத்து ஒரே மூச்சாக ஏற முற்பட்டால் கால் ஒடிந்து விடும்' என்று அறிவுறுத்தியுள்ளார்.

நாடகக் கலைஞர், நியாயமான கருத்தைக்கூட பிறர் மனம் கொள்ளக் கனிவாகக் கூறவேண்டும். அதற்கு மாறாக முரட்டுத்தனமாகக் கூறினால் அந்த நியாயமான கருத்துக்கூட வெற்றி பெறாமல் போய்விடும் என்று பம்மல் சம்பந்தனார் இந்நூலில் கூறியுள்ள அறிவுரை எல்லோரும் பின்பற்றத்தக்கதாகும்.

'நாடகக் கலைஞர்கள் வருவாய்க்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும்' என்ற கருத்துடையவர் பம்மல் சம்பந்தனார். 'ஒருவருக்கு நூறு

ரூபாய் வருமானம் என்றால் 99 ரூபாய் 15 அணா செலவு செய்துவிட்டு மீதியைச் சேமிப்பாக வைத்துக்கொள்ள வேண்டும்.' அதை விடுத்து நூறு ரூபாய் முழுவதையும் செலவு செய்யக்கூடாது. அவ்வாறு செலவு செய்கின்றவர்கள் வாழ்வில் துன்பப்படுவர் என்று இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். இது நாடகக் கலைஞர்களுக்கு மட்டுமல்லாமல் எல்லோருக்கும் கூறப்படுகின்ற அறிவுரை என்றே கருதலாம்.

நாடக அரங்கேற்றம் என்பது பல்துறைக் கலைஞர்களின் கூட்டு முயற்சியால் உருவாவது. எனவே நடிகர்கள் அனைத்துக் கலைஞர்களையும் மதித்துப் பழகத் தெரிய வேண்டும் என்றும் அறிவுறுத்துகின்றார்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்ற வள்ளுவர் குறளுக்கு ஏற்ப நடிகர்கள் ஒழுக்கத்துடனும் கட்டுப் பாட்டுடனும் வாழ வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

நாடக அரங்கேற்றம் சிறப்பாக அமைய, அரங்க வடிவமைப்பும் திரைச்சீலை ஒப்பனையும் காட்சிக்குரிய பொருள்களும் பெருந்துணையாக அமைகின்றன. இவற்றின் ஏற்றமுறு பங்கினையும் நடிகர்கள் பேச வேண்டிய, நடிக்க வேண்டிய முறையினையும் சிறப்பான நிலையில் விளக்கியுள்ளார். திரை இழுக்க வேண்டிய முறையினைக்கூட விளக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மனிதருக்குள் ஏற்றத்தாழ்வை உருவாக்கிய சாதி அமைப்பு முறையை எதிர்த்தும் மக்கள் எல்லாரும் 'ஒரே குலம்' என்ற கருத்தை வலியுறுத்தியும், சாதிச் சண்டைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் பம்மல் சம்பந்தனார் 'பிராமணனும் சூத்திரனும்' என்ற நாடகத்தை அந்நாளிலேயே எழுதியுள்ளார் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

வெள்ளைச் சுவரில் கருப்புப் புள்ளி இருந்தால் பார்ப்பவர்களின் கண்களுக்கு உடனடியாகப் புலப்படுவதுபோல, நாடக அரங்கேற்றத்தின்போது சிறு தவறுகூடப் பார்வையாளர்களுக்குப் பெரிதாகத் தெரியும். எனவே நாடக அரங்கேற்றத்தில் சிறு தவறுகூட நிகழாமல் விழிப்புடன் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பம்மல் சம்பந்தனார் 1891இல் 'சுகுண விலாச சபா' என்ற நாடகக் குழு தோற்றம் பெற்றது முதல் 1930ஆம் ஆண்டு வரை அவர் எழுதிய நாடக நூல்கள், அவரோடு நடித்த நடிகர்கள், நாடகத் துறை தொழில் நுட்பக்

கலைஞர்கள், பிற நாடகக் குழுவில் பணியாற்றிய கலைஞர்கள், நாடகத் துறையில் ஈடுபாடு கொண்ட அறிஞர்கள் முதலியோரைப் பற்றி அறிந்து கொள்ள உதவும் இந்நூல், ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தின் நிகழ்ச்சிகளை வெளிப்படுத்தித் தொகுத்துத் தரும் நாடக வரலாறாக அமைகிறது. தமிழ் நாடக வளர்ச்சிக்குப் பாடுபடுபவர்களுக்கும், நாடக ஆய்வாளர்களுக்கும், நாடகக் கலைஞர்களுக்கும் இந்நூல் மிகவும் பயனுள்ளதாகும்.

இவ்வரிய நூலை மறுபதிப்புச் செய்து வெளியிடுவதற்கு நிதி உதவிய நடுவணரசு நிருவாகத்தில் இயங்கும் சங்கீத நாடக அகாதமிக்கும், இந்நூலை வெளியிடுவதில் தூண்டுகோலாக இருந்த சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத் துறை இணைப் பேராசிரியர் முனைவர் வீ. அரசு அவர்களுக்கும், பம்மல் சம்பந்தனாரின் நூல்களை அச்சிட்டு வெளியிடுவதற்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு உரிமை தந்த பம்மல் சம்பந்தனாரின் குடும்பத்தார்க்கும் நன்றி.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் காட்டி வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி - பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு. த. இரா. சீனிவாசன் இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

நாடக உரைநடை

நாடகத்தில் இடம்பெறும் பாத்திர உரையாடல்கள், இடையிடையே நாடக ஆசிரியர் தரும் மேடை விளக்கக் குறிப்புகள் ஆகியவற்றை நாடக உரைநடை (Dramatic prose) எனலாம். நாடக உரைநடை இயல்பு நவிற்சிப் பாங்கு உடையதாய் இருக்கும். பேச்சு வழக்கை ஒட்டியே அமையும்.

நாடகம் என்பது ஆடலுடன் பாடலும் கலந்த ஒன்றாகும். தமிழ்நாட்டில் பழங்காலத்திலிருந்தே நாடகக் கலை இருந்து வந்திருக்கிறது. இன்று நமக்குக் கிடைத்துள்ள முதல் உரைநடை நாடகம் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இயற்றப்பட்டதாகும். காசிவிசுவநாத முதலியார் எழுதிய டம்பாச்சாரி விலாசம் முதலில் வெளிவந்த உரைநடை நாடகமாகும். உரைநடை நாடகங்களைச் சமூக நாடகங்கள், வரலாற்று நாடகங்கள், புராண நாடகங்கள்

எனப் பல வகையாகப் பிரிக்கலாம். உரைநடை நாடகத்தின் தந்தை எனப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியாரைச் சொல்லலாம். செய்யுள் வடிவிலமைந்த நாடகத்தை முழுமையாக உரைநடையில் கொண்டு வந்த பெருமை இவரையே சாரும். ஏறத்தாழ நூறு நாடகங்களுக்கு மேல் உரைநடையில் எழுதி, சிலவற்றில் நடிக்கவும் செய்தவர். நாடகங்களில் துன்பவியல் முடிவு தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவரும் இவரேயாவர்.

சம்பந்த முதலியார், சங்கரதாஸ் சுவாமிகள், பரிதிமாற் கலைஞர், சுந்தரம் பிள்ளை ஆகிய நால்வரையும் புதுமுறை அமைப்புத் தமிழ்நாடகத்தின் முன்னோடிகளாகக் கருதலாம்.

நால்வருடைய நடையும் தனித்தனிச் சிறப்புடையதாகக் காணப்படுகிறது. கற்றோர் நடையில் சம்பந்த முதலியாரும், பாமரர்நடையில் சங்கரதாஸ் சுவாமிகளும், பண்டிதர் நடையில் பரிதிமாற்கலைஞரும் நாடகங்களை எழுதியுள்ளனர். கவிதை நடையில் சுந்தரம்பிள்ளையும் நாடகத்தை எழுதியுள்ளார். இவர்கள் தமிழ்நாடகவுலகைப் பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதியில் பல்வகைப்பொலிவுகளுடன் புதுமையுறச் செய்துள்ளனர்.

சங்கரதாஸ் சுவாமிகள் நடை (1867-1922)

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகத்துறைக்குத் தொண்டாற்றியவர் இவர். நாடக சபை ஒன்று ஏற்படுத்தித் தமிழக முழுவதும் நாடகங்களை நடத்தினார். அபிமன்யு சுந்தரி, பவளக்கொடி, கோவலன் சரித்திரம், சிந்தாமணி, சதி அனுசூயா, பிரகலாதன், சீமந்தினி, சிறுத்தொண்டன், வள்ளித்திருமணம், சத்தியவான் சாவித்திரி, சதி சுலோசனா, மிருச்சகடிகா, ரோமியோ ஜூலியட் முதலியன அவர் படைத்த முக்கிய நாடகங்கள் ஆகும். இவற்றுள் பல புராண நாடகங்கள், சில மொழிபெயர்ப்பு நாடகங்கள். அவர் கால நாடகங்கள் செய்யுளும் உரைநடையும் கலந்து எழுதப்பட்டனவாகும். உரையாடல் பகுதிகள் பேச்சுத் தமிழில் அமைந்திருக்கும். சில இடங்களில் உரைநடைப் பகுதிகள் நீண்ட வாக்கியங்களால் அமைந்திருக்கும். அக்காலத் தமிழைப் போன்று இவரது நடையும் வடமொழிக் கலப்பு மிகுந்ததாகக் காணப்படுகின்றது.

பம்மல் சம்பந்த முதலியார் நடை (1873-1964)

இவர் அரை நூற்றாண்டுக்காலம் தமது வாழ்வை நாடகத்துறைக்கே அர்ப்பணித்தவர். நாடகத் தொழிலுக்கு இருந்து வந்த இழிநிலையை மாற்றியமைத்தவர். 1891ஆம் ஆண்டு சென்னையில் சுகுண விலாசசபா என்ற நாடக அமைப்பை ஏற்படுத்தினார். அவரே எழுதிமுதன்முதலில் நடித்த நாடகம் புஷ்பவல்லி என்ற சமூக நாடகமாகும்.தொண்ணூறு நாடகங்களை எழுதியுள்ளார். தமிழ் நாடக உலகிற்கு இவரைப்போல் தொண்டு செய்தவர் எவருமிலர். இவரை நாடகத்தந்தை எனக் குறிப்பிடுவது முற்றிலும் பொருத்தமாகும். ரத்னாவளி, மனோகரா, கள்வர் தலைவன், இரண்டு நண்பர்கள், வேதாள உலகம் இவரது படைப்புத் திறனைக் காட்டும் நாடகங்களாகும். சபாபதி நகைச்சுவையும் நையாண்டியும் கலந்த படைப்பாகும். ஆங்கில நாடகங்களையும் வடமொழி நாடகங்களையும் மொழிபெயர்த்தார். நாடகத் துறையைப் பற்றியே நாடகத் தமிழ், நாடக மேடை நினைவுகள், நாடகக் கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி? என்ற நூல்களையும் படைத்தார்.

மனோகரா நாடகத்தின் ஒரு பகுதி :

விஜயா

: (சிரிப்புடன்) இல்லை, ‘பிராண நாதா வாரும்.’

மனோஹரன்

: எங்கே வருவது?

விஜயா

: அதோ பாரும், ஆங்காங்குப் பெண்கள் தம் காதலருடன் நீர் நிரம்பிய தடாகங்களிலிறங்கி ஒருவர் மீதொருவர் தண்ணீர் வாரி இறைத்து விளையாடியும் நிலவை வியந்து புஷ்பம் கமழ சோலைகளிலுலாவியும் புஷ்பச் செண்டுகளால் ஒருவரையொருவர் அடித்தும் புஷ்ப மாலைகளால் ஒருவரையொருவர் கட்டியிழுத்தும், மகரந்தம் தூவியும், மல்லிகை மலர்களைச் சூடியும், ஒருவர் கண்ணை ஒருவர் பொத்தியும் இன்னும் இப்படி பற்பல விதமாகக் காலங்கழிக்கிறார்களே, நாமும் போய் விளையாடுவோம்.

மனோஹரன்

: கண்ணே, என் மனம் ஏதோ ஒரு மாதிரியாக இருக்கிறது. இப்பொழுது வினோதத்தின் மீது செல்லவில்லை.

விஜயா

உம் ! உம் ! நான் எப்பொழுது அழைத்தாலும் இப்படித்தானே ! உம் ! உம் !

மனோகரன் நாடகத்தில் உரைநடை இவ்வாறு அமைந்துள்ளது.

தூங்கிக் கிடந்த தமிழ்நாடக அரங்கை விழிப்புறச் செய்து உலகநாடக வானில் ஒளியோடு விளங்க வழிகண்ட பெருமை சம்பந்தமுதலியாரையே சாரும். சம்பந்த முதலியார் காலத்திலிருந்து தமிழ்நாடக மேடையானது ஏற்றத்தாழ்வு அகன்ற நிலையில் அனைவருக்கும் இன்பம் அளிக்கும் கலைக்கூடமாகவும் அறிவு புகட்டும் கலாசாலையாகவும் சமூகத்தைச் சீர்திருத்தும் நல்வழி மன்றமாகவும் விளங்கியது. இவரது நாடகத் தொண்டைப் பாராட்டி மத்திய அரசுபத்ம பூஷண் பட்டமளித்துச் சிறப்பித்தது. சங்கரதாஸ் சுவாமிகள்பழைய மரபையொட்டிப் பாடலும், உரைநடையும் கலந்து எழுதினார். சம்பந்த முதலியார் மேலைநாட்டு முறையைப் பின்பற்றி உரைநடையில் நாடகங்களை இயற்றினார். சம்பந்த முதலியார் நாடக நடை கற்றோர்நடையாக இருப்பினும் எளிமையாகவும் இனிமையாகவும் உள்ளது. எளிய வாக்கியங்களைக் கையாண்டு உரைநடையில் எழுதியுள்ளார்.

சூரிய நாராயண சாஸ்திரியார் நடை (1871-1903)

பரிதிமாற் கலைஞர் என்று புனைபெயர் பூண்ட சூரிய நாராயணசாஸ்திரியார் நாடக இலக்கணம் குறித்து நாடகவியல் எனும் நூலையும் சில நாடகங்களையும் இயற்றினார். ஆனால், இவை நடிப்பதற்குரிய நாடகங்கள் அல்ல.

இவருடைய நாடகங்கள் அருஞ்சொற்கள் மிகுந்த தமிழ் நடையில் அமைந்துள்ளன. உரைநடை, பாட்டுக் கலந்துள்ள உரையாடல்நடையில் எழுதப்பட்டுள்ளன. மொழிநடை சற்றுக் கடினமாக இருப்பதனால் கற்றவர்களே எளிதில் பரிதிமாற் கலைஞரின்நாடகங்களை படித்துப் புரிந்து கொள்ள முடியும். இவற்றின் நடைசற்றுக் கடினமாக இருப்பதுடன் வடமொழிச் சொல் கலப்பும்அதிகமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சாமிநாத சர்மாவின் நடை

இவர் பாணபுரத்து வீரன் என்ற தேசிய நாடகம் ஒன்றை எழுதியுள்ளார். ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துடன் நமது நாடு நடத்திய போராட்டத்தை நிழற்படம் போல் காட்டிய நாடகமாகும். நல்ல தமிழ் நடையில் தேசப்பற்றை வளர்க்கும் விதத்தில் அமைந்த நாடகமாகும்.

அறிஞர் அண்ணாவின் நடை (1909-1969)

தமிழில் அறிஞர் அண்ணாவின் திறமை பாயாத துறைகளில்லை என்றுரைக்கும் வண்ணம் இலக்கியத்தின் பற்பல துறைகளிலும் படைப்புக்களைப் படைத்துள்ளார். சமூகச் சீர்திருத்தத்தோடு அரசியலையும் இணைத்துப் புதியதோர் உலகம் செய்வோம், கெட்டபோரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம் என்ற பாவேந்தரின் பாடலுக்குச் செயல் வடிவங்கள்தான் அறிஞர் அண்ணாவின் நாடகங்கள். வேலைக்காரி, ஓர் இரவு, கண்ணீர்த்துளி, சந்திரமோகன், நீதிதேவன் மயக்கம், காதல் ஜோதி முதலான நாடகங்கள் சிறந்த நோக்குடன் இயற்றப்பட்டவை. அண்ணாவின் நாடகங்கள் தாழ்த்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோரின் எழுச்சிக் குரலாகவும் புதிய எண்ணத்தையும் நம்பிக்கையையும் ஊட்டுவனவாகவும் உள்ளன. ‘நாடக அரங்குகள் பாமர மக்களின் பல்கலைக்கழகம்’ என்ற கவிக்குயில் சரோஜினிதேவியின் கூற்றுக்கு எடுத்துக்காட்டாக, நாடகங்களை எழுதிப் பாமர மக்களிடையே உலவச் செய்தவர். அண்ணாவால் நாடகத்துறை மறுமலர்ச்சி பெற்றதெனின் மிகையாகாது.

பழந்தமிழ்ச் சொற்களைக் கையாண்டு, உரைநடைக்குப் புத்துயிரூட்டினார். புதிய சொல்லாக்கங்களை அமைத்தார். அண்ணாவின் மேடைப்பேச்சு, தம்பிக்குக் கடிதம் போன்றவைகளெல்லாம் பெரும்பாலும் பேச்சு மொழியிலே அமைந்திருந்தன. அண்ணாவின் நடையில் கிப்பனுடைய ஆங்கில மொழித்தாக்கமும் இங்கர்ஸாலின் தாக்கமும் காணலாம். அவர்களது நடையில் ‘பேலன்ஸ் ஸ்ட்ரக்சர்’ அருமையாகக் கையாளப்பட்டுள்ளது. அதை அண்ணா தமிழில் கையாள ஆரம்பித்த போது தமிழுக்கு ஒரு புதிய நடை கிடைத்தது என்பர். அண்ணாவின் மொழிநடையில் புலவர் தமிழின் செல்வாக்கும், பேச்சுத் தமிழின் செல்வாக்கும் அவர் சார்ந்த இயக்கத்தில் அவரின் தனி ஆற்றலால் உருவாகிய புதிய கூறுகளும் அமைந்துள்ளன என, அண்ணாவின் மொழிநடையை ஆராய்ந்த பேராசிரியர் ம.செ.ரபிசிங் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. எதுகை, மோனை, அடுக்குமொழி, உவமை,


உருவகம், ஓசை நயம், பழமொழி, மேற்கோள் போன்றவற்றைத் தமது நடையில் பயன்படுத்தி நடையை வளம்பெறச் செய்தார் எனக்கூறலாம்.

காதல் ஜோதி நாடகத்திலிருந்து ஒரு பகுதி.

“விழாத்தலைவர் : மணமக்களே ! பெரியோர்களே ! நண்பர்களே ! இந்தத் திருமண விழாவுக்கு என்னைத் தலைவனாக இருக்கும்படி அழைத்தார்கள். மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டேன். . . கண்ணுக்கும் கருத்துக்கும் இனிமையான காட்சி இது. கலப்புத் திருமணம். விதவைக்கு மறுமணம். காலப்போக்கை உணர்ந்து அறிவுக்குப் பொருத்தமான முறையில் நடத்தப்பட்ட காதல் மணம். அம்மி மிதித்து அரசாணைக்கால் வைத்து அக்னி சாட்சியாக நடத்தப்பட்டது தோழியர் சுகுணாவின் திருமணம்.”

இவ்வாறு அறிஞர் அண்ணாவின் நடை, தமிழ் உரைநடைவரலாற்றில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. தமிழ் எழுத்து நடையிலும்பேச்சு நடையிலும் அண்ணா சகாப்தம் என்று அழைக்கப்படும்அளவுக்கு ஒரு பெரிய சகாப்தத்தை உருவாக்கிவிட்டுச் சென்றார்.

அறிஞர் அண்ணா நாடகங்களில் கையாண்ட உரைநடைபுதுமையானது. சிந்தனையைக் கிளறுவது. நாடகம் எழுதுவதற்குப்பழகு தமிழைக் கையாண்டார். பழகு தமிழைப் பயன்படுத்திப்பைந்தமிழுக்கு உயர்வையும் சிறப்பையும் கூட்டினார். சுருக்கமாகக்கூறின் தமிழுக்கு அவர் ஒரு புது நடை தந்தார். அண்ணாவின் எழுத்தால் தமிழ் உரைநடை புதிய உயிரோட்டம் பெற்று விளங்குகிறது எனலாம்.



பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய "சபாபதி முதலியாரும்-பேசும் படமும்" ஒரு புகழ்பெற்ற நகைச்சுவை நாடகமாகும். இக்கதை, சபாபதி என்ற கதாபாத்திரத்தின் அறியாமையையும், சமூகத்தில் பேசும் படங்கள் (திரைப்படம்) வரத்தொடங்கிய காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் நகைச்சுவையுடன் சித்தரிக்கிறது. இந்த நாடகத்தில் நாடகக் கலைஞர்கள் சினிமாவுக்கு மாறுவது குறித்த சூழலும், நவீன உலகத்தோடு ஒத்துப்போகாத சபாபதியின் போக்குகளும் விவரிக்கப்பட்டுள்ளன.

முக்கிய அம்சங்கள்:

- **ஆசிரியர்:** பம்மல் சம்பந்த முதலியார் (தமிழ் நாடகத் தந்தை).
- **வகை:** நகைச்சுவை நாடகம்.
- **பொருள்:** அக்கால சமூகச் சூழல், பேசும் படம் (சினிமா) பற்றிய நகைச்சுவையான பார்வைகள், மற்றும் சபாபதியின் நகைச்சுவை உரையாடல்கள்.
- **உள்ளடக்கம்:** சபாபதி முதலியார் என்ற கதாபாத்திரம் நாடகத்தில் உள்ள சங்கீதப் பித்து, அறியாமை மற்றும் அக்காலகட்டத்தின் சமூகச் சிக்கல்களை நகைச்சுவையாகக் காட்டுகிறது.
- **ஆவண இருப்பிடம்:** இந்த நாடகம் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் டிஜிட்டல் நூலகத்தில் கிடைக்கிறது.

பம்மல் சம்பந்த முதலியார் தமிழ் நாடக மேடைக்கு பல நகைச்சுவை மற்றும் சமூக நாடகங்களை வழங்கியுள்ளார், அதில் இதுவும் ஒன்றாகும்.



மனைவியால் மீண்டவன் (Blessed in a Wife) என்பது ராவ் பஹதூர் ப. சம்பந்த முதலியார் அவர்களால் எழுதப்பட்ட ஒரு புகழ்மிக்க தமிழ் நாடக நூல் ஆகும். வி. வி. ஶ்ரீனிவாச ஐயங்கார் இயற்றிய நாடகத்தின் மொழிபெயர்ப்பான இது, 1928-இல் வெளியிடப்பட்டது. இந்த நாடகம் பம்மல் சம்பந்த முதலியாரின் தேசியமயமாக்கப்பட்ட புத்தகங்களின் பட்டியலிலும் இடம் பெற்றுள்ளது.

முக்கிய தகவல்கள்:

- **ஆசிரியர்:** ப. சம்பந்த முதலியார்
- **வகை:** நாடகம் (மொழிபெயர்ப்பு)
- **வெளியீடு:** 1928, சென்னை, டௌடன் கம்பெனி
- **வேறு பெயர்கள்/பதிப்புகள்:** Blessed In A Wife

இது ஒரு நகைச்சுவை மற்றும் குடும்பப் பின்னணியிலான நாடகமாகப் பரவலாக அறியப்படுகிறது. இந்த நாடகத்தைப் பற்றிய மேலும் விரிவான

தகவல்களை [தமிழ் இணையக் கல்விக்கழகத்தின்](#) இணையதளத்தில் அறியலாம்.


Sahadeva's Stratagem
A TAMIL DRAMA
BY
Rao Bahadur P. SAMBANDAM, B.A., B.L.,
Author of:
"The Two Sisters," "Galava," "Manohara," "Blind Ambition," "The Two Friends," "Fate and Love," "Sarangadhara," "Simhalanatha," "Pushpavalli," "Amaladitya," "Magapathi," "Farces," "Sirathondar," "The Golden Fetters," "True Love," "The Bandit Chief," "Markandeya," "The Fair Ghost," "The Merchant of Vasipura," "The Wedding of Valli," "The Eve of Love," "Vijayarangam," "As you like it," "Ratnavali," "Lord Buddha," "The Tragedy of Silence," "The Good Fairy," "Geetha Manjari," "Harischandra," "As We Sow-So We Reap," "The Curse of Durvasi," "Chandrahari," "The Demon Land," "Sabapathy Part I," "The Pongal Feast" or "Sabapathy" Part II, "A Rehearsal" or "Sabapathy" Part III, "Blessed-in a Wife," "The Dancing Girl" "Subhadra Arjuna" "Karna The Giver" etc. in Tamil, and "Harischandra," and "Yayathi" in English.
FIRST EDITION.
Madras:
PRINTED BY DOWDEN AND CO., AT THE "PEERLESS PRESS," 21, Sunkurama Chetty Street.
1928
All Rights reserved.
[Price per Copy

'சகதேவன் சூழ்ச்சி' என்பது ராவ் பஹதூர் ப. சம்பந்த முதலியார் அவர்களால் எழுதப்பட்ட ஒரு தமிழ் நாடகமாகும். இது மகாபாரதக் கதையை அடிப்படையாகக் கொண்டது. சகுனி, துரியோதனன் மற்றும் துச்சாதனன் ஆகியோரின் தீய குணங்களை சித்தரிப்பதோடு, அவர்கள் வஞ்சகமாக சகாதேவனிடம் போருக்கான நாள் குறிப்பது போன்ற காட்சிகளை இந்த நாடகம் சித்தரிக்கிறது.

முக்கிய அம்சங்கள்:

- **ஆசிரியர்:** பம்மல் சம்பந்த முதலியார்.
- **மையப்பொருள்:** கௌரவர்களின் தந்திரம் மற்றும் பாண்டவர்களின் நிலை.
- **நாடக அமைப்பு:** சகுனி மற்றும் துரியோதனனின் சூழ்ச்சிகள், குறிப்பாகப் போருக்கான சரியான நேரத்தைத் தேர்ந்தெடுக்க சகாதேவனைப் பயன்படுத்துவது.
- **தகவல் ஆதாரம்:** இது விக்கிமூலம் மற்றும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் கிடைக்கிறது.

இந்த நாடகம் மகாபாரதத்தின் ஒரு பகுதியை நாடக வடிவில், கதாபாத்திரங்களின் தந்திரமான திட்டங்களை வெளிப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

சுப்பிரமண்ய ஆலயங்கள்

தமிழ்நாட்டின் மிக முக்கியமான சுப்பிரமண்ய (முருகன்) ஆலயங்கள் அறுபடை வீடுகள் ஆகும். திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி மற்றும் பழமுதிர்சோலை ஆகியவை முருகனின் அருளாட்சி புரியும் முக்கிய தலங்களாகும். இவை தவிர, வடபழனி, சிறுவாபுரி, திருப்போரூர் மற்றும் மருதமலை போன்ற பல சிறப்பு வாய்ந்த தலங்களும் உள்ளன.

முக்கிய முருகன் தலங்கள் (அறுபடை வீடுகள்):

- **திருப்பரங்குன்றம்:** முருகன் தெய்வானையை மணந்த தலம்.
- **திருச்செந்தூர்:** சூரபத்மனை வென்று கடலோரத்தில் அருளும் தலம்.
- **பழனி:** தண்டாயுதபாணியாக ஞானப்பழம் பெற்ற தலம்.
- **சுவாமிமலை:** சிவபெருமானுக்கு பிரணவ மந்திரம் ஓதிய தலம்.
- **திருத்தணி:** கோபம் தணிந்து வள்ளி, தெய்வானையுடன் அருளும் தலம்.
- **பழமுதிர்சோலை:** ஔவையாருக்கு நாவல் பழம் தந்த தலம்.

பிற பிரபலமான ஆலயங்கள்:

- **வடபழனி முருகன் கோவில்:** சென்னையில் உள்ள பிரசித்தி பெற்ற தலம்.
- **திருப்போரூர் கந்தசாமி கோயில்:** சென்னைக்கு அருகில் உள்ள பழைமையான தலம்.
- **மருதமலை முருகன் கோவில்:** கோயம்புத்தூரில் அமைந்துள்ள மலைக்கோவில்.
- **சிறுவாபுரி பாலசுப்பிரமணிய சுவாமி கோயில்:** சென்னைக்கு அருகில் உள்ளது.
- **கதிர்காமம்:** இலங்கையில் உள்ள மிக முக்கிய தலம்.

இவை அனைத்திலும் முருகப்பெருமான் வேலாயுதத்துடன் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

அமலாதித்யன் அல்லது குர்ஜரத்து அரசிளங்குமரன்

https://archive.org/details/dli.jZY9lup2kZl6TuXGlZQdjZl6kuIy.TVA_BOK_0004108



அமலாதித்யன் அல்லது குர்ஜரத்து அரசிளங்குமரன், பம்மல் சம்பந்த முதலியார் அவர்களால் 1908-ல் எழுதப்பட்ட ஒரு புகழ்பெற்ற தமிழ் நாடகமாகும். இது ஷேக்ஸ்பியரின் உலகப் புகழ்பெற்ற 'ஹாம்லெட்' (Hamlet) நாடகத்தைத் தழுவி, இந்தியச் சூழலுக்கு ஏற்ப எழுதப்பட்ட ஒரு துயர நாடகம் (Tragedy) ஆகும்.

முக்கிய அம்சங்கள்:

- **ஆசிரியர்:** ராவ் பகதூர் பம்மல் சம்பந்த முதலியார்.
- **மூலம்:** ஷேக்ஸ்பியரின் 'ஹாம்லெட்'.
- **கதைக்களம்:** குர்ஜர (குஜராத்) நாட்டைப் பின்னணியாகக் கொண்டது.
- **மையக்கரு:** தந்தையின் மரணத்திற்குப் பழிவாங்கும் அரசிளங்குமரனின் கதை.
- **பாத்திரங்கள்:** அமலாதித்யன் (ஹாம்லெட்), கௌரிமணி (அன்னை), மற்றும் பலர்.

இந்த நாடகம் தமிழில் ஷேக்ஸ்பியர் நாடகங்களை மேடையேற்றுவதில் முன்னோடியாகத் திகழ்ந்தது. இப்புத்தகம் தமிழ் இணையக் கல்விக்கழகம் மற்றும் தமிழ் டிஜிட்டல் லைப்ரரி போன்ற தளங்களில் வாசிக்கக் கிடைக்கிறது

chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://www.tamilvu.org/library/nationalized/pdf/22-pammalk.sambandam/28-amaladitya.pdf

நாடகமே உலகம் … பகுதி-1
(ஷேக்ஸ்பியர் நாடகங்கள் தமிழில் …!!!)

https://vimarisanam.com/2020/11/24/%e0%ae%a8%e0%ae%be%e0%ae%9f%e0%ae%95%e0%ae%ae%e0%af%87-%e0%ae%89%e0%ae%b2%e0%ae%95%e0%ae%ae%e0%af%8d-%e0%ae%aa%e0%ae%95%e0%af%81%e0%ae%a4%e0%ae%bf-1/



" நாடகமே உலகம்...
நாமெல்லாரும் அதில் நடிகர்கள்"

- இந்த புகழ்பெற்ற வார்த்தைகளைச் சொன்னவர் பிரபல ஆங்கில இலக்கியகர்த்தா-நாடகாசிரியர் ஷேக்ஸ்பியர்...

" All the world's a stage,
And all the men and women merely players;
They have their exits and their entrances;
And one man in his time plays many parts,"

- "As You Like It "- WILLIAM SHAKESPEARE

இந்த விமரிசனம் தளத்தில் நாம் இதுவரை பார்க்காத ஒரு பகுதி- நாடக உலகம்.

இங்கே தமிழ் நாட்டின் நாடகத்துறையைப்பற்றி கொஞ்சம் விவரமாகவும், முடிந்த வரை சுவாரஸ்யமாகவும் எழுதவேண்டும் என்பதற்காக கொஞ்சம் விசேஷ முயற்சிகளை மேற்கொண்டு, பல விவரங்களைச் சேகரித்திருக்கிறேன். இதையொட்டி, இந்த தலைப்பையொட்டிய செய்திகள்

நிறையவற்றை வலைத்தளத்தில் தேடிப்படிக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தது.

நான் படித்தவற்றிலிருந்து, முடிந்தவரை சுவாரஸ்யமானவற்றை வடிகட்டியெடுத்து, என் எழுத்தில் ஒரு இடுகைத் தொடராக இங்கே தர விரும்புகிறேன்.

பல வலைத்தளங்களின் உதவியோடு தான் நான் இவற்றை சேகரிக்க முடிந்தது. சம்பந்தப்பட்ட வலைத்தளங்களுக்கு இந்த வலைத்தளத்தின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மஹாபாரத, ராமாயண காலங்களில் இருந்தே நமக்கு அறிமுகமானது தான் தெருக்கூத்து.

அதற்கு அடுத்த நிலை கிராமங்களில் நெடுங்காலமாக கோவில் திருவிழாக்களில் இரவு முழுவதும் நடந்துகொண்டிருந்த புராண, இதிகாச நாடகங்கள்...

பின்னர், 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ்நாட்டில் வடிவெடுத்தது தொழில்முறை நாடகங்கள்... சர்க்கஸ் கம்பெனிகளைப் போல் ஊர் ஊராகச் சென்று சில மாதங்கள் வரை அங்கேயே தங்கியிருந்து நாடகங்களை நடத்திவந்த தனி முதலாளிகளால் நடத்திவரப்பட்ட பாய்ஸ் கம்பெனிகள்...

பெரும்பாலும் சிறு வயதுப் பிள்ளைகளைக் கொண்டு 8 வயது முதல் 15 வயது வரையிலான, (வறுமையான குடும்பங்களைச் சேர்ந்த பையன்கள்) கம்பெனி வாத்தியார் என்று நடிப்பு, வசனம் பேச சொல்லிக்கொடுக்கும் ஆசிரியர்கள் உதவியோடு நாடகங்கள் நடத்தப்பட்டன.

இந்த பாய்ஸ் கம்பெனி நாடகங்கள் பெரும்பாலும் மக்கள் ஏற்கெனவே ஓரளவு அறிந்திருந்த புராணக் கதைகளையே நாடகங்களாக அரங்கேற்றி வந்தன. இங்கே நடிப்பவர்களுக்கு

முகபாவங்களோ, முகலட்சணமோ முக்கியமில்லை; மனப்பாடம் பண்ண வேண்டும், சத்தமாக வசனங்கள் பேச வேண்டும் (மைக் கிடையாது....) நன்றாகப் பாடத்தெரிய வேண்டும். 14-15 வயதில் பையன்களுக்கு மகரக்கட்டு –தொண்டைக்கட்டு – உடைந்து, குரல் மாறி விட்டால் – வாய்ப்புகள் பறிபோய்விடும்.

இதையொட்டி, புகழ்பெற்ற சில நடிகர்கள் நடத்திவந்த ஸ்பெஷல் நாடகங்கள் உருவாயின...

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய ஒரு சிறந்த கலை வடிவம் ஸ்பெஷல் நாடகம்.

சங்கரதாஸ் சுவாமிகள் நாடகக் குழுவான – சமரச சன்மார்க்க நாடக சபா, மதுரை ஸ்ரீ பால மீன ரஞ்சனி சங்கீத சபா, (எம்.கே.ராதா அவர்களின் தந்தை) கந்தசாமி முதலியாரின் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி, ஸ்ரீ மங்கள பாலகான சபா, ஆலந்தூர் இந்து டிராமா கம்பெனி, ஆரியகான சபா, தேவி நாடக சபா, டிகேஎஸ் சகோதரர்களின் நாடக கம்பெனி போன்ற குழுக்களால் தமிழகத்தில் நாடகக்கலை புத்துயிர் பெற்றது.

அந்தந்த பாய்ஸ் கம்பெனி குழுக்களில் பயிற்சி பெற்ற பிரபலமான நாடக நடிகர்கள் சேர்ந்து ஸ்பெஷல் நாடக வடிவத்தை உருவாக்கினார்கள். பின்பு நடிகர் நடிகையர்கள் ஒருவரோடு ஒருவர் வெவ்வேறு இடங்களில் மாறி மாறி இணைந்து நடிப்பது இத்தகைய நாடகங்களின் விசேஷ இயல்பானது.

குறிப்பிட்ட ஊரில் நாடகம் நடத்துவதற்கு அவ்வூர் மக்கள் எந்தெந்த நடிகர்களை விரும்பி அழைக்கிறார்களோ அவர்களாக வந்து நாடகத்தில் நடிப்பார்கள். நாடகத்திற்கென்று தனியாக ஒத்திகை ஏதும் நடைபெறாது.

கலைஞர்கள் பாடல்களையும் வசனங்களையும் சூழ்நிலைக்கேற்ப நிகழ்த்துவார்கள். நடிகர்கள் எல்லோருக்கும் எல்லா நாடகங்களும் தெரிந்திருந்தால் தான் ஸ்பெஷல் நாடகத்தில் நடிக்க முடியும்.

அவரவர்கள் கற்ற வித்தையின் மூலம் ஒருவரை ஒருவர் வெல்லும் நோக்கத்தில் நிகழ்ச்சியைப் பேசியும் பாடியும் நிகழ்த்துவார்கள். அவை அவரவர் திறமையை முழு அளவில் வெளிப்படுத்தக்கூடிய போட்டி நாடகங்களாகவே இருக்கும்...! முக்கிய தகுதி – நன்றாக பாடத்தெரிந்திருக்க வேண்டும்.

நகர்ப்புறங்களைவிட கிராமப்புறங்களில் ஸ்பெஷல் நாடகங்களுக்கு மிகுந்த வரவேற்பும், செல்வாக்கும் உண்டு. மற்ற நாடகங்களைப்போல் அல்லாமல் ஸ்பெஷல் நாடகங்களில் சீன், செட்டுகள் அதிகம் இடம் பெறுவதில்லை. முகப்புத் திரை (backdrops), வீட்டுத்திரை, வீதித்திரை, காடுதிரை என்று, பொதுவான திரைகளே அதுவும் மிகக்குறைந்த அளவில் பயன்படுத்தப்பட்டு வந்தன.

மக்கள் எல்லாருக்கும் தெரிந்த கதைகளே ஸ்பெஷல் நாடகங்களில் இடம் பெறும்...வள்ளித் திருமணம், அரிச்சந்திரா, சத்தியவான் சாவித்திரி, கோவலன் கதை, அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி போன்ற கதைகள் மக்களிடையே செல்வாக்கு பெற்றவை. பாடல்களும், வசனங்களுமாக இரவு முழுவதும் இத்தகைய நாடகங்கள் நடைபெறும்.

1930-ல் பேசும் படங்கள் அறிமுகமாகும் வரை, பாய்ஸ் கம்பெனி நாடகங்கள் தான் தமிழக மக்களின் முக்கிய பொழுது போக்காக இருந்தது.

தொடரும் ...

https://vimarisanam.com/2020/11/25/%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%9F%E0%AE%95%E0%AE%AE%E0%AF%87-

%E0%AE%89%E0%AE%B2%E0%AE%95%E0%AE%AE%E0%AF%8D-%E0%AE%AA%E0%AE%95%E0%AF%81%E0%AE%A4%E0%AE%BF-2-%E0%AE%B7%E0%AF%87%E0%AE%95%E0%AF%8D/

(முதல் பகுதியின் தொடர்ச்சி...)

இங்கே மேலே செல்வதற்கு முன்னால், 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழக நாடக மேடையை முற்றிலுமாக ஆக்கிரமித்து, அதை அடியோடு மாற்றி வடிவமைத்த பம்மல் சம்பந்த முதலியார் அவர்களைப் பற்றி பல சுவாரஸ்யமான விஷயங்களை இங்கே அவசியம் சொல்லியாக வேண்டும்.

(தமிழில் பாய்ஸ் நாடக கம்பெனிகளை உருவாக்கி திறம்பட செயல்பட வைத்தவர்களில் ஒருவரான தலைமை ஆசிரியர் தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகள் அவர்களுக்கும் இதில் பெரும் பங்குண்டு. இவரைத் தொடர்ந்து அவருக்கு வருவோம்.)



தமிழ் நாடக உலகின் தந்தை என்று மதிக்கப்படுபவர்
பம்மல் திரு.சம்பந்த முதலியார்...

19-ஆம் நூற்றாண்டின் இறுதியில், உள்ளே நுழைந்தார் பம்மல் முதலியார் – தமிழ் நாடகமேடைக்கு புத்துணர்வும் புதுப்பொலிவும் தந்தார். அதுவரை இதிகாச நாடகங்களையும், புராண நாடகங்களையும் மட்டுமே நடத்தி வந்த தொழில்முறை நாடகக் குழுவினரின் போக்கை மாற்றி, அவர்கள் வரலாறு மற்றும் சமூக நாடகங்கள் நடிக்கத் தூண்டுகோலாக அமைந்தார்.

“கூத்தாடிகள்” என்றழைக்கப்பட்டு வந்தவர்களின் நிலையை உயர்த்தி “கலைஞர்கள்” என்று அழைக்கப்படும் நிலையை உருவாக்கினார்.

ஷேக்ஸ்பியரின் ஆங்கில நாடகங்களையும், வடமொழி நாடகங்களையும் தமிழில் மொழிபெயர்த்து, அவற்றிற்கு புதிதாக நாடக வடிவம் தந்து தமிழ் நாடகமேடையில் ஒரு புதிய உலகத்தை உருவாக்கினார். முற்றிலும் பாடல்களாலேயே நிறைந்திருந்த தமிழ் நாடகங்களில், வசனங்களுக்கு முக்கியத்துவம் உண்டு பண்ணினார்.

பம்மல் சம்பந்த முதலியார் பிறந்தது 9.2.1873-ல். சென்னையில். முதலில் மாநிலக் கல்லூரியில் படித்து பட்டமும், பின்னர் சட்டக் கல்லூரியிலும் படித்து பி.ஏ., பி.எல். பட்டமும் பெற்றார். சில காலம் வழக்கறிஞராகவும், பின்னர் நீதியரசராகவும் பணியாற்றினார். 24.9.1967-ல் மறைந்தார்.

சம்பந்த முதலியாரின் தந்தை பம்மல் விஜயரங்க முதலியார், தாயார் மாணிக்கவேலம்மாள் . விஜயரங்க முதலியார் முதலில் தமிழ் ஆசிரியராகவும், பின்னர் இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸ் என்கிற அரசு உத்தியோகத்திலும் இருந்தவர்.

அவர் பல தமிழ்ப் புத்தகங்களை வெளியிட்டு வந்தார். அதன் காரணமாக அவர்கள் வீட்டில் ஆங்கிலத்திலும் தமிழிலுமாக இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் இருந்தன. படிக்கத் தெரிந்த நாள் முதல் சம்பந்தம் இந்த புத்தகங்களையெல்லாம் ஒன்றொன்றாக ஆர்வமுடன் படித்து பழக்கமானதால் தானும் எழுத வேண்டும் என்கிற அவா அவரிடம் இயல்பாகவே எழுந்தது.

அவரது சிறு வயதில் அவரது தாயார் உணவு ஊட்டும்போது, ராமாயணம், பாரதம், பெரிய புராணம் போன்றவற்றிலிருந்து தினமும் ஒரு புதுக் கதை சொல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தான் நாடக ஆசிரியன் ஆனதற்கு, இவைகளே காரணம் என்று தனது "நாடக மேடை நினைவுகள்" என்கிற புத்தகத்தில் கூறுகிறார் சம்பந்தம்.

அந்தக் காலத்தில் நடை பெற்ற நாடகங்கள் இரவு முழுவதும் விடிய விடிய நடக்கும். அதே போல் எல்லா நாடகங்களும் மங்களமாகவே முடியும்.

இந்த பழக்கத்தை மாற்றி, இன்பமும் துன்பமும் கலந்த முடிவுகளுடன் நாடகங்களைப் படைத்தார் முதலியார். இரவு பூராவும் நடந்த நாடகங்களை மூன்று மணி நேரத்துக்குள் சுருக்கிய பெருமையும் அவரையே சாரும்.

பெல்லாரி கிருஷ்ணமாச்சார்யலு என்பவரது சரச வினோத சபா என்கிற நாடகக்குழு சென்னையில் முகாம் போட்டு, பல நாடகங்களை நடத்தினார்கள். இந்த நாடகங்கள் சம்பந்தத்தை வெகுவாகக் கவர்ந்தன.

மேலும் இந்த பெல்லாரி குழுவில் – வழக்கறிஞர்கள், நல்ல வேலையிலிருந்தவர்கள், படிப்பறிவு மிகுந்தவர்கள் ஆகியோர் பங்கேற்று,

தொழில் முறையில் இல்லாமல், பொழுதுபோக்குக்கு என்றே நாடகம் நடத்தியது அவரிடம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது.

இதன் விளைவாக தனது நண்பர்கள் 6 பேருடன் சேர்ந்து, சென்னை ஜார்ஜ் டவுனில் -1891-ம் வருடம் ஜூலை ஒன்றாம் தேதி, சுகுண விலாச சபை என்ற நாடகக் குழுவை உருவாக்கினார். அப்போது அவருக்கு வயது 18 என்பது குறிப்பிடத்தக்கது.



A Group of Actors of the S. V. Sabha in 1895.

1895-ல் எடுக்கப்பட்ட பம்மலின் சுகுண விலாச சபா நாடகக்குழுவினரின் படம்..... மேற்படி படத்தில் இருப்பவர்கள் அனைவரும் ஆண்களே ....

(இந்த சுகுண விலாச சபா இன்றும் சென்னையில் இயங்குகிறது என்பதை அறிந்தால் ஆச்சரியம் உண்டாகிறது அல்லவா...? அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிந்தால், இன்னும் ஆச்சரியம் கூடும்... விவரங்கள் அடுத்த பகுதியில்....)

அதே சமயத்தில் சென்னைக்கு விஜயம் செய்த ஒரு பார்சி நாடகக் குழு சம்பந்தத்தை ஈர்த்தது. முக்கியமாக அவர்களது மேடை அமைப்புகள், உடை அலங்காரங்கள்,

பின்னணிப் படுதா, பக்கத் திரைகள், மேலே தொங்கட்டான்கள், ஜாலர்கள் எல்லோரையும் கவரும் வண்ணம் இருந்தன.

அவர்களது நேரம் தவறாமையும், ஒரு காட்சிக்கும் மற்றோர் காட்சிக்கும் இடையே இருந்த இடைவெளியும், அவருக்கு மகிழ்ச்சியளித்தன. தன்னுடைய

நாடகங்களிலும் இதே போல் அமைப்புகள் இருக்க வேண்டும் என்றெண்ணியவர், பின்னர் இதை நடைமுறையிலும் நிறைவேற்றிக் காட்டினார்...

சுகுணவிலாச சபை நடத்திய நாடகங்களில் அனைத்திலும் சம்பந்தம் அவர்கள் தான் கதாநாயகன்.(ஹீரோ)

ரங்கவடிவேலு முதலியார் என்பவர் தான் ஹீரோயின் – இதே அமைப்பு 1895-லிருந்து 1923ம் வருடம் வரை தொடர்ந்திருக்கிறது.

பம்மல் சம்பந்தம் 529 முறை நாடக மேடையில் தோன்றி இருக்கிறார். 109 வெவ்வேறு நாடகப் பாத்திரங்களில் நடித்திருக்கிறார்.

அவர் எழுதி அச்சிட்டுள்ள நாடகங்களின் தொகை 68 – அவரது அனுமதியுடன் 1891-லிருந்து, 1934ம் வருடம் வரை சுகுண விலாச சபையாராலும்,

சென்னையிலும், வெளியூர்களிலும் உள்ள மற்ற சபைகளாலும், அவரது நாடகங்கள் 4070 முறை மேடையேறியுள்ளன.

அரசு பதவியிலிருந்து 1928ல் ஓய்வு பெற்ற பிறகு, அடுத்த ஏழு வருடங்கள் வரை சுகுண விலாச சபையில் மிகவும் ஆர்வத்துடன் கலந்து கொண்டிருந்தார். அப்போது ஏற்பட்ட ஒரு

மனக்கசப்பின் காரணமாக சபையின் நடவடிக்கைகளில் தனது ஈடுபாட்டைக் குறைத்துக் கொண்டார்.

ஆனால் நாடக மேடையில் தோன்றும் அவர் ஆர்வம் அவருக்கு சற்றும் குறையவில்லை என்பது,

ஐம்பதுகளின் ஆரம்பத்தில் – கிட்டத்தட்ட 80 வயதில் –

நடராஜா அமெச்சூர் குழு (தோட்டக்கார விசுவனாதன் தலைமையில்) சுகுண விலாச சபையில் ஒரு நாடகம் நடத்திய போது, தானே வலிய வந்து தோட்டக்காரனின் அண்டை வீட்டுக்காரனாக இரண்டு நிமிடம் மேடையில் தோன்றி வசனம் பேசி ரசிகர்களிடையே பலத்த கரகோஷத்தைப் பெற்ற நிகழ்வின் மூலம் தெரிய வந்தது.

நாடகமே உலகம் – பகுதி -3
(சபாபதி' யிலிருந்து சில நகைச்சுவை காட்சிகள் ....)

https://vimarisanam.com/2020/11/26/%e0%ae%a8%e0%ae%be%e0%ae%9f%e0%ae%95%e0%ae%ae%e0%af%87-%e0%ae%89%e0%ae%b2%e0%ae%95%e0%ae%ae%e0%af%8d-%e0%ae%aa%e0%ae%95%e0%af%81%e0%ae%a4%e0%ae%bf-3-%e0%ae%9a%e0%ae%aa%e0%ae%be%e0%ae%aa%e0%ae%a4/



திரைப்படமாக வெற்றி பெற்ற பம்மல் சம்பந்த முதலியாரின் முழுநீள நகைச்சுவை நாடகம்

தமிழில் வெளிவந்த முதல் முழுநீள காமெடி படம் சபாபதி.

டி.ஆர். ராமச்சந்திரனும், காளி.என்.ரத்தினமும், ஆர்.பத்மாவும் முக்கிய பாத்திரங்களில் நடித்திருந்தனர்.

“சபாபதி” கதை முதலில் பம்மல் சம்பந்த முதலியார் அவர்களால் நாடகமாக எழுதி மேடையேற்றப்பட்டு,

பின்னர் அது ஏவிஎம் செட்டியார் அவர்களுக்கு மிகவும் பிடித்துப் போனதால், அவரால் திரைப்படமாக எடுக்கப்பட்டு, வெற்றிகரமாக ஓடிய ஒரு படம்.

ஏற்கெனவே தொடர்ந்து 3 தோல்விப்படங்களை தயாரித்து, வெளியிட்டு, நொந்து போயிருந்த ஏவிஎம் செட்டியார் தமிழ் திரைப்படத்துறையில் தைரியமாக தொடர்ந்து செயல்பட நம்பிக்கையூட்டிய அளவிற்கு மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது சபாபதி.

(சம்பந்த முதலியார் அதை ஆங்கிலத்தில் சாமுவேல் லவர் உருவாக்கியிருந்த ஹாண்டி-ஆண்டி என்கிற நகைச்சுவை பாத்திரத்தின் தூண்டுதலில் தமிழில் உருவாக்கி நாடகவடிவில் கொண்டு வந்தார்... அதுவே பின்னர் திரைப்படமாகவும் வெளிவந்து மாபெரும் வெற்றி பெற்றது.)

1941-ஆம் ஆண்டு, சுமார் 40,000 ரூபாய் செலவில் எடுக்கப்பட்ட படம் சபாபதி ....!!!

இந்தப்படத்தில் நடிக்க டி.ஆர்.ராமச்சந்திரனுக்கு கொடுக்கப்பட்ட சம்பளம் வெறும் 35 ரூபாய்...!!!

திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த டி.ஆர்.ராமச்சந்திரன் 5-வது வகுப்பு வரை மட்டுமே பள்ளியில் படித்தவர். அவர் தந்தை வசதியான காண்டிராக்டராக இருந்தாலும்,

பையனுக்கு பள்ளிக்குச்செல்ல விருப்பம் இல்லாமல் இருந்ததைப் பார்த்து நீ என்ன தான் செய்ய விரும்புகிறாய் என்று கேட்டிருக்கிறார்.

அப்போதே டி.ஆர்.ஆர். நன்றாகப் பாடுவார். தான் நாடகங்களில் நடிக்க விரும்புவதாகவும், தன்னை பாய்ஸ் கம்பெனியில் சேர்த்து விடும்படியும் கேட்டார். அதைத்தொடர்ந்து, பையனின் விருப்பப்படியே அவனை 'மதுரை பால மோஹன ரஞ்சிய சபா' என்கிற பாய்ஸ் கம்பெனியில் சேர்த்து விட்டார்.

நாடகத்தில், டி.ஆர்.ஆர். பெண் வேடங்களில் நடித்து வந்தார்.

ஒரு சமயம் கர்நாடகத்திலுள்ள கோலாருக்கு நாடகம் போடப் போனபோது, பையன்களை அம்போ'வென்று கைவிட்டு விட்டு, நாடக கம்பெனி முதலாளி ஓடிப்போய் விட்டார்.

கையில் ஊர் திரும்பக்கூட காசில்லாத பையன்கள் தெருக்களில் பாட்டுப்பாடி, சாப்பாட்டிற்கும், ஊர் திரும்பவும் காசு சம்பாதித்தனர்.

நந்தகுமார் என்கிற படத்தில் ஒரு காமெடி ரோல் மூலம் திரையுலகில் நுழைந்தார் டி.ஆர்.ராமச்சந்திரன். சபாபதி அவருடைய 2-வது படம் தான். ஆனால், அது பெற்ற மாபெரும் வெற்றி, அடுத்த பத்தாண்டுகளுக்கு டி.ஆர்.ராமச்சந்திரனுக்கு தமிழ்த் திரையுலகில் பெரியதொரு கதாநாயகனுக்கான இடத்தைத் தந்தது.

இவ்வாறு நாடகத்திலிருந்து திரையுலகிற்கு வந்து பெரும் வெற்றி பெற்று, கதாநாயகனாக உருவெடுத்த நடிகர் என்று டி.ஆர். ராமச்சந்திரனை சொல்லலாம். அவருடைய வெற்றி, பல நாடக நடிகர்களுக்கு எதிர்காலத்தைப் பற்றிய நல்ல நம்பிக்கையை ஊட்டியது.

அதோ போல், நாடக ஆசிரியரான பம்மல் சம்பந்த முதலியாருக்கும் சபாபதி ஒரு வெற்றிகரமான திரைக்கதாசிரியர் தோற்றத்தை உருவாக்கிக் கொடுத்தது. அதற்குப் பிற்பட்ட காலத்தில், சம்பந்த முதலியாரின் மேலும் சில நாடகங்கள், திரைப்படங்களாக உருவெடுக்கவும் அது காரணமாக இருந்தது.

சபாபதி படத்திலிருந்து டி.ஆர்.ராமச்சந்திரன் - காளி என்.ரத்தினம் பங்கேற்கும் சில நகைச்சுவை காட்சிகளை கீழே தந்திருக்கிறேன்...!!!

அவற்றைப் பார்த்து ரசிக்கும் முன்னர், வாசக நண்பர்கள் தங்கள் ரசனையையும், மனோநிலையையும் கொஞ்சம் அட்ஜஸ்ட்...(!) செய்துகொள்ள வேண்டும்.

இது 1941-ஆம் ஆண்டில் வாழ்ந்த சமூகத்திற்கானது... அப்போதைய சமூகத்தில் இருந்த பேச்சு வழக்குகளையும், பழக்க வழக்கங்களையும் பிரதிபலிக்கும் காட்சிகள் இவை. அப்போது இருந்த தொழில் நுட்ப வசதிகளை வைத்துக்கொண்டு உருவாக்கப்பட்ட படம் இது -என்பதை மனதில் கொண்டு பார்த்தால், இந்த காட்சிகள் ரசிக்கும்...!!!

வாசக நண்பர்களின் நேர வசதியை மனதில் வைத்து, சில நிமிடங்களுக்கு மட்டுமான காட்சிகளை தந்திருக்கிறேன்.

01] Sabapathy - T.R.Ramachandran-Kali N.Rathnam - Comedy 1
https://www.youtube.com/watch?v=iGG2fiZmEIo [9:33]

Directed by : A. V. Meiyappan, A. T. Krishnaswamy
Music by : Saraswathi Music Troupe
Starring : T. R. Ramachandran, Kali N. Rathnam, R. Padma, C. T. Rajakantham, K. Sarangapani, P. R. Mangalam

Sababathy Mudaliar is the son of Rao Sahib Manikka Mudaliar and a pet of his mother Thiribura Ammal. He is studying in the Matriculation class. He is a fool with some intelligence. His man servant is a even greater fool. Both their names are the same. The antics of these two gems forms the foundation of this story. The film tells the story of a happy-go-lucky young man Sabapathy and his man servant (also named as Sabapathy). neglects his studies and repeatedly fails his high school examinations. To make matters

worse, his marriage is arranged with Sivakami, daughter of a friend of his mother, Thribura Ammal. While Sabapathy's father initially rebukes Sivakami for distracting Sabapathy from his studies and Thribura Ammal for her decision to marry off Sabapathy before comnpleting his high school studies, he relents when he finds that Sivakami was actually assisting Sabapathy in his preparation for the examinations. The film ends with Sabapathy eventually clearing his high school examinations with the help of his wife.

02] **Sabapathy - R.Padma's Brother gets Fooled**

https://www.youtube.com/watch?v=08-PauV1bSM [8:24]

ஷேக்ஸ்பியருக்கும் மனோகராவிற்கும் என்ன சம்பந்தம்...?
(நாடகமே உலகம் – பகுதி-4)

https://www.google.com/search?q=%E0%AE%9A%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%AA%E0%AE%A4%E0%AE%BF+%E0%AE%AE%E0%AF%81%E0%AE%A4%E0%AE%B2%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D+%E0%AE%AA%E0%AF%87%E0%AE%9A%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D+%E0%AE%AA%E0%AE%9F%E0%AE%AE%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D+(%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%9F%E0%AE%95%E0%AE%AE%E0%AF%8D)&rlz=1C1CHZN_enIN1091IN1091&oq=%E0%AE%9A%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%AA%E0%AE%A4%E0%AE%BF+%E0%AE%AE%E0%AF%81%E0%AE%A4%E0%AE%B2%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D+%E0%AE%AA%E0%AF%87%E0%AE%9A%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D+%E0%AE%AA%E0%AE%9F%E0%AE%AE%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D+(%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%9F%E0%AE%95%E0%AE%AE%E0%AF%8D)&gs_lcrp=EgZjaHJvbWUyBggAEEUYOTIKCAEQABiABBiiBDIKCAIQABiABBiiBDIHCAMQABjvBTIHCAQQABjvBTIHCAUQABjvBdIBCTM5OTRqMGoxNagCCLACAfEFe0bENDxXbDg&sourceid=chrome&ie=UTF-8



ஷேக்ஸ்பியருக்கும் மனோகராவிற்கும் என்ன சம்பந்தம்...?

சம்பந்த முதலியார் தான் சம்பந்தம்...!!!

விசித்திரமான உலகம்... விந்தையான மனிதர்கள்...

பற்பல விதங்களில் உருமாற்றம் செய்யப்பட்டு,

மாபெரும் வெற்றி பெற்ற ஒரு நாடகம்.....!!!

முதலில், 1906-ல், ஷேக்ஸ்பியரின் புகழ்பெற்ற நாடகமான "ஹேம்லெட்"-ஐ நேரடியாகத் தமிழ்ப்பெயர்களுடன் "அமலாதித்யன்" என்கிற தலைப்பில் தமிழில் நாடகமாக மொழி பெயர்த்தார் பம்மல் சம்பந்த முதலியார். இதில் மேற்கத்திய பின்னணி அப்படியே பிரதிபலித்ததால், அவ்வளவாக எடுபடவில்லை.

அமலாதித்யன் புத்தகத்திலிருந்து -
அந்தக் காலத்திய கொடுமையான நாடகத்தமிழை
கொஞ்சம் அனுபவிக்க - சாம்பிள்....

பின்னர் சில வருடங்கள் கழித்து, இதே கதையை, தமிழ்ப் பின்னணி கொண்டதாக மாற்றி "மனோகரா" என்கிற நாடகத்தை உருவாக்கி, அரங்கேற்றி, அவரே கதாநாயகனாகவும் நடித்தார். நாடகம் நல்ல வரவேற்பைப் பெற்றது...

நாடகம் பெற்ற வரவேற்பைத் தொடர்ந்து "மனோகரா" முதலில் 1936-ல் தமிழில் திரைப்படமாக எடுக்கப்பட்டது. இது எத்தகைய வரவேற்பை பெற்றது என்பது தெரியவில்லை; எவ்வளவு தேடியும் இதைப்பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை;

அதன் பின், நடிகர் கே.ஆர்.ராமசாமி, மனோகரா நாடகத்தை தனது நாடக குழுவின் சார்பில் நடத்தி வந்தார். அதில் அவரே கதாநாயகன் மனோகரனாக நடித்திருந்தார். ஒரு வேடிக்கை என்னவென்றால், அந்த மேடை நாடகத்தில், மனோகரனின் தாய் ராணியாக (கண்ணாம்பா) பெண் வேடத்தில்

சிவாஜி கணேசன் நடித்து வந்தார்...(அப்போது அவர் இன்னும் சிவாஜி ஆகவில்லை;)

இதை ஜுபிடர் பிக்சர்ஸ் சார்பில் இளங்கோவன் கதைவசனம் எழுத, ஏ.எஸ்.ஏ.சாமி இயக்க, கே.ஆர்.ராமசாமி கதாநாயகன் மனோகரனாக நடிக்க திரைப்படமாக எடுப்பதாக முயற்சி துவங்கியது.

ஆனால், அது எப்படியெப்படியோ உருமாறி, இறுதியில், எல்.வி.பிரசாத் டைரக்ஷனில், மு.கருணாநிதி அவர்களின் திரைக்கதை, வசனத்தில் – சிவாஜி கணேசன் மனோகரனாக நடிப்பதாக முடிவடைந்தது.

இதனால், கே.ஆர்.ராமசாமி தன் வாய்ப்பு பறி போனது குறித்து நீண்ட நாட்கள் வரை பெருங்கோபத்தில் இருந்ததாக எங்கோ படித்திருக்கிறேன்.

கலைஞர் கருணாநிதி, தனது கற்பனையோடு, கைவண்ணத்தையும் கலந்து, திரைக்கதை, வசனம் எழுதி மெருகூட்ட,

சிவாஜி கணேசனின் அற்புதமான தமிழ் உச்சரிப்போடு, 1954-ல் வெளியாகி பிரம்மாண்டமான வெற்றியை பெற்றது 2-வது மனோகரா. படத்தின் வெற்றிக்கு கண்ணாம்பாவின்உணர்ச்சிகரமான நடிப்பும், வசனமும், கூட ஒரு காரணமாக அமைந்தது.

மனோகராவின் அடித்தளம் ஷேக்ஸ்பியரின் ஹேம்லெட் மட்டுமல்ல.... திரைக்கதை அமைக்கும் பொறுப்பு கருணாநிதியிடம் வந்ததும், அவர் இறுதிக்காட்சியில் (க்ளைமேக்ஸ்) சில அற்புதமான மாற்றங்களைச் செய்தார்.


மனோகரனை சங்கிலியால் பிணைத்து தூணில் கட்டி சித்திரவதை செய்யும் காட்சியில், கலைஞர் ஆங்கிலப்படமான சாம்ஸன் & டிலைலா படத்தைத்தழுவி சில மாற்றங்களைச் செய்தார்.

இறுதிக்காட்சியில், ராணி(மனோகரனின் தாய்) " பொறுத்தது போதும் மகனே, பொங்கி எழு" என்று வீர வசனம் பேசுவதும், சங்கிலியை உடைத்துக் கொண்டு திமிறி வெளிவரும் மனோகரன் எதிரிகளை துவம்சம் செய்வதும் 1949-ல் வெளியாகி மாபெரும் வெற்றி பெற்ற சாம்சன் & டிலைலாவின் தாக்கம் தான்.

ஷேக்ஸ்பியர் எப்படியெல்லாம் உருவெடுத்து தமிழ்ப்படத்தில் அவதரித்திருக்கிறார் என்பதை நினைத்தால் தமாஷாகத்தான் இருக்கிறது.... ஒரு நாடகத்தின், ஒரு திரைப்படத்தின் வெற்றி என்பது முழுக்க முழுக்க ரசிகர்களின் எதிர்பார்ப்பை சரியாக எடைபோட்டு உருவாக்குவதில் தான் இருக்கிறது.... என்பதை இது உறுதிப்படுத்துகிறது.

சாம்பிளுக்கு - மனோகரா திரைப்படத்திலிருந்து ஒரு காட்சி -

Manohara Movie : Sivaji Ganesan, Best Mother Sentiment Scene
https://www.youtube.com/watch?v=Bl8aY-pZEZ8 [11:21]



பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய **"சபாபதி முதலியாரும்-பேசும் படமும்"** ஒரு புகழ்பெற்ற நகைச்சுவை நாடகமாகும். இக்கதை, சபாபதி என்ற கதாபாத்திரத்தின் அறியாமையையும், சமூகத்தில் பேசும் படங்கள் (திரைப்படம்) வரத்தொடங்கிய காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் நகைச்சுவையுடன் சித்தரிக்கிறது. இந்த நாடகத்தில் நாடகக் கலைஞர்கள் சினிமாவுக்கு மாறுவது குறித்த

சூழலும், நவீன உலகத்தோடு ஒத்துப்போகாத சபாபதியின் போக்குகளும் விவரிக்கப்பட்டுள்ளன.

முக்கிய அம்சங்கள்:

- **ஆசிரியர்:** பம்மல் சம்பந்த முதலியார் (தமிழ் நாடகத் தந்தை).
- **வகை:** நகைச்சுவை நாடகம்.
- **பொருள்:** அக்கால சமூகச் சூழல், பேசும் படம் (சினிமா) பற்றிய நகைச்சுவையான பார்வைகள், மற்றும் சபாபதியின் நகைச்சுவை உரையாடல்கள்.
- **உள்ளடக்கம்:** சபாபதி முதலியார் என்ற கதாபாத்திரம் நாடகத்தில் உள்ள சங்கீதப் பித்து, அறியாமை மற்றும் அக்காலகட்டத்தின் சமூகச் சிக்கல்களை நகைச்சுவையாகக் காட்டுகிறது.
- **ஆவண இருப்பிடம்:** இந்த நாடகம் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் டிஜிட்டல் நூலகத்தில் கிடைக்கிறது.

பம்மல் சம்பந்த முதலியார் தமிழ் நாடக மேடைக்கு பல நகைச்சுவை மற்றும் சமூக நாடகங்களை வழங்கியுள்ளார், அதில் இதுவும் ஒன்றாகும்.





தமிழ் நாடக தந்தை பம்மல்

சம்பந்த முதலியார்

https://agamudayarvaralaru2017.blogspot.com/2018/02/blog-post.html



அகமுடையார் பேரினத்தில் பிறந்த தமிழ் நாடக தந்தையான பம்மல் சம்பந்த முதலியார் தமிழ் நாடகங்களை முதன் முதலில் உரைநடையில் எழுதியவர் வழக்கறிஞர், நீதியரசர், நாடகாசிரியர், மேடை நாடக நடிகர், எழுத்தாளர், நாடக இயக்குனர் என்ற பல பரிமாணங்களைக் கொண்டவர் சென்னையில் பம்மல் விஜயரங்க முதலியாருக்கும் மாணிக்கவேலு அம்மாளுக்கும் பிப்ரவரி 09 1873 அன்று பிறந்தார் விஜயரங்க முதலியார் முதலில் தமிழ் ஆசிரியராகவும் பின்னர் பள்ளிக் கல்வித் துறையில் ஆய்வாளராகவும் இருந்தவர் அவர் தானே தமிழ் நூல்களை வெளியிட்டு வந்தார் இதன் காரணமாக அவர்கள் வீட்டில் ஆங்கிலத்திலும் தமிழிலும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் இருந்தன படிக்கத் தெரிந்த நாள் முதல் சம்பந்த முதலியார் இந்த புத்தகங்களை ஒன்றொன்றாக ஆர்வமுடன் படித்து வந்தார் பின்னர் சட்டக்கல்வி பயின்று வழக்கறிஞரான இவர் 1924 முதல் 1928 வரை நீதிமன்றத் தலைவராகவும் பணி செய்தார்...!!!

நாடக எழுத்துப்பணி :

சிறு வயதிலேயே ஆங்கில, தமிழ் நாடகங்களைப் பார்த்தவர் காலப்போக்கில் தமிழ் நாடகத்தின் இழி நிலையைக் கண்டு அதில் வெறுப்புற்றிருந்தார் 1891 இல் பெல்லாரியிலிருந்து வந்த கிருஷ்ணமாச்சார்லு என்ற ஆந்திர நடிகர் நடித்த நாடகங்கள் இவருக்கு தமிழ் நாடகங்கள் மேல் பற்றினை உண்டு பண்ணின அவரது நாடகக் குழுவில் வழக்கறிஞர்களும், மருத்துவர்களும், பட்டப்படிப்பு முடித்தவர்களும் சேர்ந்திருப்பதைக் கண்ட சம்பந்த முதலியார் தாமும் அது போல ஒரு நாடகக் குழு அமைக்கத் திட்டமிட்டார் சீரழிந்த நிலையில் அவதிப்படும் தமிழ் நாடகத்தை சீர்படுத்திட வேண்டும் என்ற இவரது ஆவலும்

இவரை நாடக உலகிற்குள் புகுத்தியது நண்பர்கள் சிலருடன் சென்னை ஜார்ஜ் டவுனில் 1891 ஜூலை 1 ஆம் நாள் "சுகுண விலாச சபை" என்ற நாடகக் குழுவை உருவாக்கினார்...!!!

தற்பொழுது அந்த சுகுண விலாச சபையில் ஐயா பம்மல் சம்பந்த முதலியார் திருவுருவசிலை அமைந்துள்ளது...!!!



சுகுண விலாச சபையில் அமைந்துள்ள
பம்மல் சம்பந்த முதலியார் திருவுருவசிலை

நாடகம் என்றால் தெருக்கூத்து என்றும் சிற்றூர் மக்கள் மட்டுமே காண்பவர்கள் என்ற நிலையை மாற்றி நகரங்களிலே நல்ல மேடையமைத்து பல வகை நாடகங்களை நடத்திக் காட்டினார் உயர்குடியில் பிறந்தவர்களையும் கற்றவர்களையும், அறிஞர்களையும், சம்பந்தம் தம்முடைய நாடகங்களில் நடிக்கச் செய்தார் இவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் சர். சி.பி.ராமஸ்வாமி அய்யர், எஸ்.சத்தியமூர்த்தி, எம்.கந்தசாமி முதலியார் (எம். கே. ராதாவின் தந்தை), சர். ஆர்.கே. ஷண்முகம் செட்டியார், வி.வி.ஸ்ரீனிவாச அய்யங்கார், வி.சி.கோபாலரத்தினம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்...!!!

பம்மல் சம்பந்த முதலியார் நாடகக் கலைக்கு தம் 81வது வயது வரை பெரும்பணி ஆற்றினார் கண்பார்வை மங்கிய நிலையிலும் தாம் சொல்லியே பிறரை எழுத வைத்தார்...!!!

விருதுகளும் சிறப்புகளும் :

22வது வயதில் அவருடைய முதல் நாடகம் 'லீலாவதி-சுலோசனா' என்ற பெயருடன் அரங்கேறியது மொத்தம் 80 நாடகங்கள் எழுதினார்

1959 இல் சங்கீத நாடக அகாதமி விருது

1916 இல் நாடகப் பேராசிரியர் என்ற விருது பெற்றார்

1963 இல் பத்மபூஷண் என்ற பட்டத்தையும் பெற்றார்


தன் நாடகங்களில் சிலவற்றில் செய்யுள்,கீர்த்தனை முதலியவற்றையும் அறிமுகப்படுத்தினார் தமிழ் நாடகம் மக்களின் பார்வையில் உயர்ந்த மதிப்புக்குரியதாகத் திகழ்வதற்கு முதற்காரணமானார்...!!!



தமிழில் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் :

ஷேக்ஸ்பியரின் Hamlet, As You like it, Macbeth, Cymbeline, Merchant of Venice என்ற நாடகங்களை அவைகளின் சுவையோ நயமோ குறையாமல் 'அமலாதித்யன்', 'நீ விரும்பியபடியே', 'மகபதி', 'சிம்மளநாதன்', 'வணிபுர வானிகன்' என்ற பெயர்களில் தமிழ் நாடகங்களாக மொழிபெயர்த்தார்...!!!
பம்மல் சம்பந்த முதலியாரின் பல நாடகங்கள்
திரைப்படங்களாக்கப்பட்டுள்ளன அவற்றில் சில...!!!

காலவா ரிஷி (1932)
சதி சுலோச்சனா (1934, கதை, வசனம், இயக்கம், நடிப்பு)
மனோகரா (1936, கதை, வசனம், இயக்கம், நடிப்பு)
ரத்னாவளி (1935)
யயாதி (1938)
ராமலிங்க சுவாமிகள் (1939)
சந்திரஹரி (1941)
ஊர்வசி சாகசம் (1940)
தாசிப் பெண் (1943)
சபாபதி (1941)
வேதாள உலகம் (1948)



பம்மல் சம்பந்த முதலியார் இயற்றிய பல நூல்களை தமிழ் நாடு அரசு

நாட்டுடமையாக்கியுள்ளது அதன் பட்டியல்...!!!

இந்தியனும்–ஹிட்லரும்
இல்லறமும் துறவறமும்

என் சுயசரிதை
என் தந்தை தாயர்
ஒன்பது குட்டி நாடகங்கள்
ஓர் விருந்து அல்லது சபாபதி நான்காம் பாகம்
கலையோ-காதலோ? அல்லது நட்சத்திரங்களின் காதல்
கள்வர் தலைவன்
காதலர் கண்கள்
காலக் குறிப்புகள்
சபாபதி
சபாபதி முதலியாரும்-பேசும் படமும்
நான் குற்றவாளி
சாதாரண உணவுப் பொருள்களின் குணங்கள்
தமிழ் அன்னை பிறந்து வளர்ந்த கதை (முதல் பாகம்)
தமிழ் அன்னை பிறந்து வளர்ந்த கதை (இரண்டாம் பாகம்)
தீபாவளி வரிசை
தீயின் சிறு திவலை
நாடகத் தமிழ்
நான் கண்ட நாடகக் கலைஞர்கள்
நீண்ட ஆயுளும் தேக ஆரோக்யமும்
பலவகை பூங்கொத்து
மனை ஆட்சி
மனோகரா
மூன்று நகைச்சுவை நாடகங்கள்
யயாதி
வாணீபுர வணிகன்
விடுதிப் புஷ்பங்கள்

அகமுடையார் வழித்தோன்றல் பம்மல் சம்பந்த முதலியார் பிறந்த தினமான இன்று அவரை போற்றி வணங்குவோம் இவரை பெற்றதால் எமது அகமுடையார் இனம் பெருமை கொள்கிறது…!!!

காணொளிகள்

01] தமிழ் நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார் | தமிழ் வளர்த்த சான்றோர்கள் | Pammal Sambantha Mudaliyar
https://www.youtube.com/watch?v=lotLACeAuhM [1:15:52]

02] யார் இந்த பம்மல் சம்பந்த முதலியார்?
https://www.youtube.com/watch?v=ORO3VHdMD6k [28:50]

03] சபாபதி நாடகம் (முழு விளக்கத்துடன்) |பம்மல் சம்பந்த முதலியார்
https://www.youtube.com/watch?v=VyEK4A7_3dg [19:32]

04] **Pammal Sambanda Mudaliar - a 150th year tribute**
https://www.youtube.com/watch?v=BlM17Tyg2z4 [14:06]

05] ஹாஸ்ய வியாசங்கள் - பம்மல் சம்பந்த முதலியார்
https://www.youtube.com/watch?v=AGht7A3U5HE [10:12]

06] **Vedhala Ulagam Full Movie HD | T. R. Mahalingam | Mangalam | Tamil Classic Cinema**
https://www.youtube.com/watch?v=HFH9dgSXFIs [2:39:16]

Vedhala Ulagam (transl. Demon Land) is a 1948 Indian Tamil-language fantasy film directed and produced by A. V. Meiyappan, and written by P. Neelakantan. Adapted from the play of the same name by Pammal Sambandha Mudaliar, the film stars T. R. Mahalingam, K. Sarangapani, Mangalam, K. R. Chellam and C. T. Rajakantham. It was released on 11 August 1948 and became a commercial success.

(😊)(😊) பம்மல் சம்பந்த முதலியார் (😊)(😊)